# சுபீட்சம்

சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

e-Paper | 12 புதன்கிழமை ஆகஸ்ட் 2026 | 12 Wednesday Augus 2026 | Switzerland Edition










## சுவிட்சர்லாந்தில் தொடரும் Long Covid பாதிப்பு

### பல இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கலாம்; நோயறிதலும் சிகிச்சையும் தொடர்ந்து சவால்

## சுவிட்சர்லாந்தில் ஒய்வூதியம் குறைகிறது; காரணம் மக்கள் அதிக காலம் வாழ்வதே!

சூரிச்: சுவிட்சர்லாந்தில் மக்கள் முன்பைவிட அதிக ஆண்டுகள் வாழ்ந்து வருவதால், தொழில்சார் ஒய்வூதியத்தின்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE




## சுவிட்சர்லாந்தில் தமிழர்களின் குரலாக வலுவான அமைப்பு தேவை!

### STEDO தலைவர் இளையதம்பி சிறிதாஸ்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## சுவிட்சர்லாந்தின் Bern நகரில் இலங்கை தூதரகத்தின் நடமாடும் கொன்சுலர் சேவை

Bern: சுவிட்சர்லாந்தில் வாழும் இலங்கையர்களின் வசதிக்காக, ஜெனீவாவில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் (Consulate General of Sri Lanka) Bern நகரில் இரண்டு நாட்கள் நடமாடும் கொன்சுலர் சேவையை (Consular Mobile Service) நடத்தவுள்ளது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE




# சுவிட்சர்லாந்தில் தமிழர்களின் குரலாக வலுவான அமைப்பு தேவை!

## STEDO தலைவர் இளையதம்பி சிறிதாஸ்




சூரிச்: சமூக நிறுவனங்கள் எடுப்பதற்காக அல்ல; சமூகத்திற்குக் கொடுப்பதற்காகவே உருவாக்கப்படுகின்றன. அந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே STEDO & Swiss Tamil Economic Development Organization (சுவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம்) உருவாக்கப்பட்டுள்ளது என அதன் தலைவர் இளையதம்பி சிறிதாஸ் தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெற்ற சுவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரச மட்டங்களில் எமது சமூகத்தின் தேவைகள் மற்றும் நலன்கள் தொடர்பாகப் பேசுவதற்கு வலுவான அமைப்பு ஒன்று அவசியமாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும், நாம் வாழும் நாட்டில் ஒரு சமூகமாகப் பலமாக இருக்க வேண்டும். குகூஉஈஙீ நிறுவனத்தை எதிர்காலத்தில் இங்கு வாழும் இளம் தொழில்முனைவோரிடம் கையளித்து, அவர்களின் பங்களிப்புடன் எமது பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்த வேண்டும். அதேவேளை, தாயகத்தில் வாழும் தமிழர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதே எமது நோக்கமாகும் என்றார்.

சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழ் சமூகத்தினர் தமது திறமைகள், தொழில்முனைவு மற்றும் நம்பகத்தன்மையை வெளிப்படுத்தி, சரியான தொடர்பாடல்களை ஏற்படுத்துவதன் மூலம் பல்வேறு வாய்ப்புகளையும் நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நம்மை நாம் சரியான முறையில் நிரூபித்து, தேவையான தொடர்புகளை உருவாக்கிக் கொண்டால் பல நன்மைகளைப் பெற முடியும். அதேபோன்று தாயகத்திலும் வலுவான பொருளாதார அடித்தளத்தை உருவாக்கி, எதிர்காலத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

தமிழ் சமூகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அனைவரும் ஒரே இலக்கை நோக்கிப் பயணிப்பது அவசியம் என வலியுறுத்திய அவர், சுவிட்சர்லாந்தில் தொழில் மற்றும் பொருளாதார ரீதியாக முன்னேறுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

நமது சிந்தனைகள் ஒருமுகப்படுத்தப்பட்டதன் காரணமாகவே இன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம். இந்த ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தி, குகூஉஈஙீ அமைப்பை சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழ் சமூகத்தின் பொருளாதார அடையாளமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என குகூஉஈஙீ தலைவர் இளையதம்பி சிறிதாஸ் தனது உரையில் தெரிவித்தார்.

# சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெற்ற சுவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தின் காட்சிகள்























# சிறிய தொடர்பு – பெரிய வெற்றி

## STEDO செயலாளர் இ.இரவிந்திரன்




சூரிச்: கடந்த 18 மாதங்களில் STEDO – சுவிஸ் தமிழ் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு பயனுள்ள வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளதாகவும், சுவிட்சர்லாந்தில் வாழும் தாயகத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோர்களை ஒரே குடையின் கீழ் இணைத்து வலுவான பொருளாதாரத் தளத்தை உருவாக்குவதே நிறுவனத்தின் முக்கிய இலக்கு என்றும் குகூஉஈஙூ செயலாளர் இராசமாணிக்கம் இரவிந்திரன் தெரிவித்தார்.

சூரிச்சில் நடைபெற்ற STEDO நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், கடந்த 18 மாத காலப் பயணத்தில் நேரம், உழைப்பு மற்றும் ஒத்துழைப்பை வழங்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

எமது நோக்கம் வெறுமனே ஓர் அமைப்பை நடத்துவது மட்டுமல்ல. சுவிட்சர்லாந்தில் வாழும் எமது தாயகத்தைச் சேர்ந்த அனைத்து வர்த்தகர்களையும் தொழில்முனைவோர்களையும் ஒரே குடையின் கீழ் இணைத்து, அவர்களின் வளர்ச்சிக்கும் பரஸ்பர ஒத்துழைப்பிற்கும் வலுவான தளத்தை உருவாக்குவதே எமது இலக்காகும் என அவர் குறிப்பிட்டார்.

STEDO ஏற்கனவே பல்வேறு முன்னேற்றங்களை எட்டியுள்ள போதிலும், எதிர்காலத்தில் சாதிப்பதற்கு இன்னும் பல வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவித்த அவர், அவற்றை அடைவதற்கான மிகப்பெரிய சக்தியாக தொடர்பாடல் அமையும் என வலியுறுத்தினார்.

வரலாற்றைப் பார்த்தாலும், தொழில்துறையை எடுத்துக்கொண்டாலும் சரியான தொடர்பாடல் மூலம் எண்ணற்றவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். ஒரு சிறிய அறிமுகம், ஒரு சிறிய உரையாடல் அல்லது ஒரு சிறிய தொடர்பு கூட எதிர்காலத்தில் மிகப்பெரிய வணிக வாய்ப்பாகவும் நீண்டகால வெற்றியாகவும் மாறக்கூடும் என்றார்.

சிறிய தொடர்பு – பெரிய வெற்றி என்பது வெறும் வாசகம் அல்ல; அது STEDO வின் அனுபவத்தின் மூலம் உணரப்பட்ட ஒன்று எனத் தெரிவித்த இரவிந்திரன், அந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல புதிய உறுப்பினர்களை இணைத்து, புதிய முயற்சிகளை முன்னெடுத்து நிறுவனத்தை வலுப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

குகூஉஈஙூ-வின் எதிர்காலப் பயணத்தில் அனைவரும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதுடன், தங்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கைகோர்த்து முன்னேற வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

நாம் ஒன்றிணைந்தால் வளர்ச்சி நிச்சயம்; நாம் இணைந்தால் வெற்றி உறுதி என்ற நம்பிக்கையுடன் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என STEDO செயலாளர் இராசமாணிக்கம் இரவிந்திரன் தெரிவித்தார்.

# STEDO

**SWISS TAMIL ECONOMICS DEVELOPMENT ORGANIZATION**

ஒற்ற உயர்வோம் – ஒற்றுமையால் முன்னேறுவோம்

Together We Rise – Through Unity We Progress

## புதிய பொறுப்புகள் – புதிய நம்பிக்கைகள்!

### STEDO பொதுக்கூட்டத் தெரிவு

**09.08.2026** அன்று நடைபெற்ற **STEDO** பொதுக்கூட்டத்தில், அமைப்பின் வளர்ச்சிக்கும் இளைய தலைமுறையின் முன்னேற்றத்திற்கும் வழிவருக்கும் வகையில், பின்வரும் பதவிகள் தெரிவு செய்யப்பட்டன.



**இரா. கேதீஸ்வரன்**

உப செயலாளர்

அமைப்பின் நிர்வாக செயல்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பில் திறம்பட்ட பணியாற்றுவார்.



**ர. சாரங்கன்**

இளம்தொழில்முனைவோரின் இணைப்பாளர்

இளைய தொழில்முனைவோருடன் இணைந்து அவர்களின் வளர்ச்சிக்கும் வலைப்பின்னலுக்கும் பங்களிப்பார்.

**இருவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்!**

நம் அமைப்பின் வளர்ச்சிக்கும் – சமுக முன்னேற்றத்திற்கும் உங்கள் சேவை என்றும் ஒளிரட்டும்.

STEDO Switzerland

ஒற்றுமை | புதிய சிந்தனை | சமுக முன்னேற்றம்

For People | By People | With People


rib
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
உங்கள் கணக்குகள் – எங்கள் பொறுப்பு!
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நம்பகமான மற்றும் தொழில்முறை கணக்கியல் சேவைகள்.
கணக்குப் பதிவு – Buchhaltung
வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
MWST / VAT கணக்கீடு
சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
Quellensteuer
நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்
துல்லியம் • நம்பிக்கை • தனிப்பட்ட சேவை
உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில் நம்பிக்கையான துணையாக...
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch


நல்லூரின் இதயத்தில் உலகத் தரச் சொகுசு அனுபவம்
"WORLD-CLASS LUXURY EXPERIENCE IN THE HEART OF NALLUR"
SPECIAL OFFER
10% OFF
Exclusive Offer Valid Through
31 DECEMBER 2026
Use Promo Code:
CH2026
Suisse RESIDENCY
SWISS COMFORT, JAFFNA SOUL.
booking@suisseresidency.lk
+94 21 221 08 88
www.suisseresidency.lk
+94 77 877 90 00

## சுவிட்சர்லாந்தில் ஓய்வூதியம் குறைகிறது; காரணம் மக்கள் அதிக காலம் வாழ்வதே!



(Second Pillar) மாதாந்திர மற்றும் வருடாந்திர வழங்கப்படும் தொகை தொடர்ந்து குறைந்து வருவதாக VZ Wealth Management Centre வெளியிட்ட ''Pension Barometer 2026'' ஆய்வு தெரிவிக்கிறது.

ஆய்வின்படி, கடந்த 20 ஆண்டுகளில் தொழில்சார் ஓய்வூதியம் சராசரியாக 16.4 சதவீதம், அதாவது ஆண்டுக்கு சுமார் 12,260 சுவிஸ் பிராங்குகள் வரை குறைந்துள்ளது.

உதாரணமாக, தற்போது ஆண்டு 120,000 பிராங்குகள் வருமானம் பெறும் 55 வயதுடைய ஒருவர், 65 வயதில் ஓய்வு பெற்றால் ஆண்டுக்கு சுமார் 62,660 பிராங்குகள் ஓய்வூதியமாகப் பெறுவார். இதே நிலையில் 2002 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றிருந்தால், ஆண்டுக்கு 74,920 பிராங்குகள் கிடைத்திருக்கும்.

ஆய்வாளர்கள் கூறுவதாவது, இது ஓய்வூதிய நிதி குறைந்துவிட்டதற்கான அறிகுறி அல்ல. மாறாக, மக்கள் முன்பைவிட நீண்ட காலம் வாழ்வதால், அதே சேமிப்பு நிதியை அதிக ஆண்டுகளுக்கு பகிர்ந்து வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. 1985 ஆம் ஆண்டு 500,000 பிராங்குகள் ஓய்வூதிய சேமிப்புடன் ஓய்வு பெற்ற ஒருவர் ஆண்டுக்கு சுமார் 36,000 பிராங்குகள் பெற்றிருந்தார். இன்று அதே அளவு சேமிப்புடன் ஓய்வு பெறுபவருக்கு ஆண்டுக்கு சுமார் 26,000 பிராங்குகள் மட்டுமே வழங்கப்படுகிறது.

எனினும், ஓய்வுக்குப் பிந்தைய சராசரி ஆயுட்காலம் 14.9 ஆண்டுகளில் இருந்து 20.4 ஆண்டுகளாக உயர்ந்துள்ளதால், வாழ்நாள் முழுவதும் பெறப்படும் மொத்த ஓய்வூதியத் தொகையில் பெரிய மாற்றம் இல்லை என்று ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

இதனால், எதிர்கால ஓய்வூதிய வாழ்க்கையை நிதி ரீதியாக பாதுகாக்க, தனிப்பட்ட சேமிப்புகள் மற்றும் கூடுதல் முதலீட்டு திட்டங்களை முன்கூட்டியே திட்டமிடுவது மிகவும் அவசியம் என நிதி நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

## சுவிட்சர்லாந்தின் Bern நகரில் இலங்கை தூதரகத்தின் நடமாடும் கொன்சுலர் சேவை

இந்த சிறப்பு சேவை 2026 ஆகஸ்ட் 29 சனிக்கிழமை மற்றும் ஆகஸ்ட் 30 ஞாயிற்றுக்கிழமை, இரு நாட்களிலும் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

**இடம்:**

**Haus der Religionen**
**Europaplatz 1**
**3008 Bern**

இந்த நடமாடும் சேவையில் புதிய கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், கடவுச்சீட்டில் பெயர் திருத்தம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு, இரட்டைக் குடியுரிமை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், பிறப்பு-திருமணம்-இறப்பு சான்றிதழ்களை வழங்குதல், திருமணமாகாத நிலை தொடர்பான உறுதிமொழிப் பத்திரங்களைச் சான்றளித்தல், ஓய்வூதியதாரர்களின் உயிர்வாழ் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் உறுதிமொழிப் பத்திரங்கள், **Power of Attorney** உள்ளிட்ட ஆவணங்களைச் சான்றளித்தல் போன்ற பல்வேறு சேவைகள் வழங்கப்படவுள்ளன.

**முன்பதிவு அவசியம்**

இந்த சேவையைப் பெற விரும்புவோர் 2026 ஆகஸ்ட் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முன்பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தேவையான ஆவணங்கள் மற்றும் விரிவான தகவல்களை இலங்கை தூதரகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம்.

தொடர்புக்கு:

**slcgs.genevalankamission.org**
**+41 77 990 6073**
**+41 77 909 8969**

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் இலங்கையர்கள் **Bern** நகரிலேயே முக்கிய கொன்சுலர் சேவைகளைப் பெற்றுக்கொள்ள இந்த இரண்டு நாள் நடமாடும் சேவை வாய்ப்பளிக்கிறது.



NOLIMIT ONE
GmbH
ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch




த மி ழி ன் குர லா ய்
CLICK HERE
அக்கினி fm
Akkini




# சுவிஸ் கொடி ஏன் சதுரம்?

## 687 ஆண்டுகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் வரலாறு!

உலக நாடுகளின் தேசியக் கொடிகளில் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டது சுவிட்சர்லாந்தின் தேசியக் கொடி. சிவப்பு பின்னணியில் வெள்ளைச் சிலுவையுடன் காணப்படும் இக்கொடியின் மற்றொரு சிறப்பு அதன் சதுர வடிவம். வத்திக்கான் நகருடன் சேர்த்து சதுர வடிவ தேசியக் கொடியைக் கொண்ட மிகச் சில நாடுகளில் சுவிட்சர்லாந்தும் ஒன்றாகும்.

இதன் வரலாறு 1339ஆம் ஆண்டு நடைபெற்ற ஃச்தணீனுண போருடன் தொடர்புபடுத்தப்படுகிறது. அப்போரில் Bern மற்றும் பழைய சுவிஸ் கூட்டமைப்பைச் சேர்ந்த வீரர்கள், போர்க்களத்தில் தங்கள் படையினரை அடையாளம் காண்பதற்காக கவசங்களில் வெள்ளைச் சிலுவையைப் பயன்படுத்தியதாக வரலாற்றுச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. இதுவே பின்னாளில் சுவிஸ் அடையாளமாக வளர்ந்தது.

19ஆம் நூற்றாண்டில் வெள்ளைச் சிலுவை மீண்டும் முக்கியத்துவம் பெற்றது. 1814ஆம் ஆண்டு Swiss Cross கூட்டமைப்பின் அதிகாரப்பூர்வ சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து 1840ஆம் ஆண்டு தளபதி Guillaume&Henri Dufour முன்னெடுத்த ஒரே மாதிரியான இராணுவக் கொடியிலும் இந்த அடையாளம் இடம்பெற்றது. சுவிஸ் கொடியின் சதுர வடிவத்திற்கான முக்கிய காரணமும் அதன் இராணுவப் பாரம்பரியமே. அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட இராணுவக் கொடிகள் சதுர வடிவில் இருந்ததால், அந்த மரபு தொடர்ந்து தேசியக் கொடியிலும் நிலைத்தது. 1889ஆம் ஆண்டு வெள்ளைச் சிலுவையின் வடிவம் சட்டரீதியாக வரையறுக்கப்பட்டது. எனினும், கொடி சதுரமாக இருக்க வேண்டும் என்பது நீண்டகாலம் பாரம்பரியமாகவே பின்பற்றப்பட்டது. 2017ஆம் ஆண்டு முதல் சுவிஸ் தேசியக் கொடி சதுர வடிவில் இருக்க வேண்டும் என்பது சட்டத்தில் தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டது. இதிலும் ஒரு சுவாரசியமான விதிவிலக்கு உள்ளது. கடலில் பயணிக்கும் சுவிஸ் கப்பல்களில் பயன்படுத்தப்படும் தேசியக் கொடி, சர்வதேச கடல்சார் விதிகளுக்கு ஏற்ப செவ்வக வடிவில் காணப்படுகிறது.

போர்க்களத்தில் வீரர்களை அடையாளம் காணத் தொடங்கிய வெள்ளைச் சிலுவை, பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்று உலகம் உடனடியாக அடையாளம் காணும் சுவிட்சர்லாந்தின் முக்கிய தேசியச் சின்னமாக மாறியுள்ளது. சதுரத்திற்குள் 687 ஆண்டுகால வரலாறு – அதுதான் சுவிஸ் தேசியக் கொடியின் தனிச்சிறப்பு!




# சூரிச் Street Parade; 9 இலட்சம் பங்கேற்பாளர்கள் 906 பேருக்கு சிகிச்சை 30 பேர் கைது

சூரிச்சில் சனிக்கிழமை நடைபெற்ற 33வது Street Parade நிகழ்வில் சுமார் 9 இலட்சம் Techno இசை ரசிகர்கள் பங்கேற்ற நிலையில், மருத்துவ உதவி மற்றும் பொலிஸ் நடவடிக்கைகளும் அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

Schutz und Rettung Zrich தகவலின் படி, நிகழ்வின்போது மொத்தம் 906 பேருக்கு மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் வெட்டுக் காயங்கள், சிராய்ப்புகள் மற்றும் அதிக மதுபானப் பாவனை காரணமாக சிகிச்சை பெற்றுள்ளனர். கடும் வெப்பமும் இம்முறை Street Parade நிகழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

சூரிச் நகர பொலிஸார் 30 பேரை கைது செய்துள்ளனர். திருட்டு, போதைப்பொருள் விற்பனை, தாக்குதல் மற்றும் வெளிநாட்டவர்-ஒருங்கிணைப்பு சட்ட மீறல்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தக் கைதுகள் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், மாலை மற்றும் இரவு நேரங்களில் மோதல்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை கடுமையாக காயமடைந்தவர்கள் குறித்த தகவல்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸார் 50 கிராமுக்கும் அதிகமான Amphetamine, 40 கிராமுக்கும் அதிகமான Ketamine, சுமார் 20 கிராம் Cocaine மற்றும் 100க்கும் மேற்பட்ட Ecstasy மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளனர்


MULTI CONSULTING
Versicherung & Finanz
IMMOBILIEN
VERSICHERUNG
FINANZ
வீடு வாங்க விற்க
வங்கிக்கடன்
காப்புறுதிகள்
வருமானவரிப்படிவம் நிரப்புதல்
சமூக அக்கறை எமது இலக்கு!!
079 765 50 57
8180 Bülach ZH
info@multiconsulting.ch
www.multiconsulting.ch




# Switzerland ல் குறைந்து வரும் Bancomat கள்

Swiss National Bank தரவுகளின்படி, 2020ஆம் ஆண்டில் சுமார் 7,300 Bancomat இயந்திரங்கள் இருந்த நிலையில், 2026ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை சுமார் 6,000 ஆகக் குறைந்துள்ளது.

இது சுமார் 18 சதவீத வீழ்ச்சியாகும்.

பணத்தை நேரடியாகப் பயன்படுத்தும் பழக்கம் குறைவது, கார்டு மற்றும் மொபைல் கட்டணங்கள் அதிகரிப்பது உள்ளிட்ட காரணங்கள் இந்த மாற்றத்திற்கு பின்னணியாகக் கருதப்படுகின்றன. PostFinance நிறுவனமும் தனது Postomat இயந்திரங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் 2025ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டைவிட சுமார் 10 சதவீதம் குறைந்ததாக தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், Switzerland-ல் பாரம்பரிய Bancomat-களின் எதிர்காலம் என்ன? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# 25 வயதுக்குள் பதிவு செய்யாவிட்டால் சுவிஸ் குடியுரிமை இழக்கும் அபாயம்!

சுவிட்சர்லாந்துக்கு வெளியே பிறந்த சுவிஸ் வம்சாவளியினர் தங்களது குடியுரிமை தொடர்பான பதிவுகளை உரிய காலத்திற்குள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பொதுவாக தாய் அல்லது தந்தையில் ஒருவர் சுவிஸ் குடிமகனாக இருந்தால், வெளிநாட்டில் பிறந்த குழந்தைக்கும் வம்சாவளி அடிப்படையில் சுவிஸ் குடியுரிமை கிடைக்கலாம். ஆனால் வெளிநாட்டில் பிறந்து, சுவிஸ் குடியுரிமையுடன் மற்றொரு நாட்டின் குடியுரிமையையும் கொண்டிருப்பவர்கள் சில சட்டப்பூர்வ பதிவு நடைமுறைகளைத் தவறவிட்டால், 25 வயதை அடையும் போது சுவிஸ் குடியுரிமையை இழக்கக்கூடும்.

இதனைத் தவிர்க்க, வெளிநாட்டில் குழந்தை பிறந்தவுடன் அதன் பிறப்பை சம்பந்தப்பட்ட சுவிஸ் தூதரகம் அல்லது துணைத் தூதரகத்தில் விரைவாகப் பதிவு செய்வது முக்கியமானதாகும். மேலும், இளம் சுவிஸ் குடிமக்கள் வயது வந்ததும், வெளிநாட்டிலுள்ள சுவிஸ் குடிமக்கள் பதிவேட்டில் தங்களது பதிவை உறுதிப்படுத்துமாறு தூதரகம் அனுப்பும் அறிவிப்புகளை புறக்கணிக்கக் கூடாது.

### 25 வயதுக்கு முன் என்ன செய்ய வேண்டும்?

25 வயதை அடைவதற்கு முன், சம்பந்தப்பட்டவர் சுவிஸ் அதிகாரிகளுடன் தனது குடியுரிமை தொடர்பை முறையாகப் பதிவு செய்திருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக, சுவிஸ் தூதரகத்தில் பதிவு செய்திருத்தல், பிறப்பு சுவிஸ் சிவில் பதிவேட்டில் இடம்பெற்றிருத்தல் அல்லது சுவிஸ் குடியுரிமையைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்புவதாக எழுத்துமூலம்

அறிவித்திருத்தல் போன்றவை முக்கியமானவை. இந்த காலக்கெடுவைத் தவறவிட்டு சட்ட நிபந்தனைகளின் கீழ் குடியுரிமையை இழந்தவர்களுக்கு இன்னும் ஒரு வாய்ப்பு உள்ளது. பொதுவாக, குடியுரிமை இழந்த நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் மீண்டும் குடியுரிமை பெற விண்ணப்பிக்க முடியும்.

ஆனால் அந்த 10 ஆண்டு காலக்கெடுவும் கடந்துவிட்டால், மீண்டும் குடியுரிமை பெறும் நடைமுறை மிகவும் கடினமாகலாம்.

குறிப்பாக, ஒருவர் சுவிஸ் குடியுரிமையை இழந்தால் அதன் தாக்கம் அடுத்த தலைமுறையையும் பாதிக்கக்கூடும். குடியுரிமை மீண்டும் பெறப்படாத நிலையில், அதை தமது குழந்தைகளுக்கு கடத்துவதற்கான வாய்ப்பும் இல்லாமல் போகலாம்.

எனவே வெளிநாடுகளில் வாழும் சுவிஸ் குடும்பங்கள், குறிப்பாக இரட்டைக் குடியுரிமை கொண்ட இளம் தலைமுறையினர், 25 வயது காலக்கெடுவை கவனத்தில் கொண்டு தங்களது பதிவு நிலையை முன்கூட்டியே சரிபார்த்துக் கொள்வது முக்கியம்.

# Switzerlandல் ஓய்வூதியம் 16.4% வீழ்ச்சி

# ஆண்டுக்கு 12,000 பிராங்கிற்கு மேல் குறைவு

Switzerland-ல் எதிர்வரும் ஆண்டுகளில் ஓய்வு பெறவுள்ளவர்கள், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுடன் ஒப்பிடும்போது குறைவான ஓய்வூதிய வருமானத்தை எதிர்கொள்ளக்கூடும் என VZ Retirement Barometer 2026 ஆய்வு தெரிவிக்கிறது.

ஆய்வின்படி, கடந்த 24 ஆண்டுகளில் ஓய்வூதிய வருமானம் சுமார் 16.4 சதவீதம் குறைந்துள்ளது. ஆண்டுக் கணக்கில் இந்த வித்தியாசம் 12,260 சுவிஸ் பிராங்க் வரை இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, ஆண்டுக்கு 120,000 பிராங்க் வருமானம் பெறும் 55 வயதுடைய ஒருவர் 65 வயதில் ஓய்வு பெறும்போது, தற்போதைய கணிப்பின்படி ஆண்டுக்கு சுமார் 62,660 பிராங்க் ஓய்வூதியமாகப் பெறுவார். இதே சூழ்நிலையில் 2002ஆம் ஆண்டில் கணிக்கப்பட்ட தொகை 74,920 பிராங்க் ஆக இருந்தது.

இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக Switzerland-ன் இரண்டாவது தூண் ஓய்வூதியமான Pensionskasse வழங்கும் நன்மைகள் குறைந்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை அரசின் அஹங ஓய்வூதியம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### ஓய்வூதிய அமைப்பின் மீதான நம்பிக்கையும் குறைகிறது


VZ ஆய்வில் பங்கேற்றவர்களில் சுமார் 25 சதவீதத்தினர் மட்டுமே இன்னும் 20 ஆண்டுகளுக்குப் பின்னரும் அஹங ஓய்வூதியம் பாதுகாப்பாக இருக்கும் என நம்புகின்றனர். இரண்டாவது தூண் ஓய்வூதியத்தின் நீண்டகால நிலைத்தன்மையில் நம்பிக்கை கொண்டவர்களின் எண்ணிக்கையும் சுமார் 30 சதவீதமாகவே உள்ளது.

Switzerland-ன் ஓய்வூதிய முறை AH-V, தொழில்சார் kensionskasse மற்றும் தனிநபர் சேமிப்பை உள்ளடக்கிய மூன்றாவது தூண் என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில், எதிர்கால ஓய்வூதிய வருமானம் முந்தைய வாழ்க்கைத் தரத்தைப் பேண போதுமானதாக இருக்குமா என்ற கேள்வி Switzerland-ல் மேலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.


ellaalan Fresh
Zürich நகரில் ஞாயிற்றுக்கிழமைகளிலும்
உங்களுக்குத்தேவையான
இறைச்சி, மீன், அரிசி, மற்றும்
உடனடி மரக்கறிகள், மலிகைப்பொருட்களை
பெறவேண்டுமா எங்களிடம் வாருங்கள்.
இறைச்சி
மீன்
புதியது • சுவை
அரிசி
சத்தமானது
மரக்கறிகள்
புதிய • சத்தான
மலிகைப்பொருட்கள்
அனைத்தும்
ஒரே இடத்தில்
Moteren Strasse 9,
8005 Zürich.
TEL
044 543 48 84
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
திறந்திருக்கும்!
FRESH
QUALITY
BEST PRICE
Freshness You Can Trust, Quality You Deserve!


TAMIL ECOAM
STEDO
SWISS TAMIL ECONOMICS DEVELOPMENT ORGANIZATION
STEDO
SWISS TAMIL ECONOMICS
DEVELOPMENT ORGANIZATION
உழைப்பால் இணைவோம்,
உயர்வாள் நிமிர்வோம்!
சுவிட்சர்லாந்து வாழ் தமிழ் வர்த்தகப் பெருமக்கள்,
இளம்தொழில்முனைவோர் மற்றும் புதிய
யோசனைகளுடன் முதலிட்டாளர்களை
ஒன்றிணைக்க செயற்படும் STEDO வில்
நீங்கள் இன்னும்
இணைந்து கொள்ளவில்லையா?
STEDOவில் இணைவோம் சாதிப்போம்
வணிக இணைப்பு
வாய்ப்புகள்
இளம் தொழில்
முனைவோருக்கு
ஆதரவு
புதிய யோசனைகளுடன்
முதலிட்டாளர்களுக்கான
வாய்ப்புகள்
தொடர்புகளுக்கு
+41 79 591 05 55
www.stedo.ch
+41 79 218 70 75
hello@stedo.ch
இணைவோம்! வளர்வோம்! உலகம் நோக்கி முன்னேறுவோம்!



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஐரோப்பாவில் தொடரும் அகதிகள் நெருக்கடியால் அரசியல் சர்ச்சை

**(கடந்த வாரம் மொராக்கோவிலிருந்து ஐரோப்பியா நோக்கிய அகதிகளாக வந்த ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேற்றவாசிகளால் நெதர்லாந்து, இத்தாலி, பிரான்ஸில் புதிய அரசியல் சர்ச்சை எழுந்துள்ளது. ஐரோப்பாவில் தொடரும் அகதிகள் நெருக்கடியை எவ்வாறு கையாளுவது என்பதை எந்த ஒரு நாடும் தீர்க்கமாக முடிவெடுக்கவில்லை)**

கடந்த இரு தசாப்தமாக ஐரோப்பிய அரசியலில் மிக அதிகமாக விவாதிக்கப்படும் பிரச்சினைகளில் ஒன்று குடியேற்றமும் அகதிகள் நெருக்கடியும் ஆகும். குறிப்பாக 2015ஆம் ஆண்டு சிரியா உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருமளவிலான அகதிகள் வருகை, ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லைக் கட்டுப்பாடு, மனிதாபிமானப் பொறுப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு போன்ற பல கேள்விகளை முன்வைத்தது. அதன் பின்னரும் வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் சஹாரா தெற்குப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவை அடைய முயன்று வருகின்றனர்.

இந்த நீடித்த குடியேற்ற அழுத்தம் நெதர்லாந்து, இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் உள்நாட்டு அரசியலையும் தேர்தல் முடிவுகளையும் குறிப்பிடத்தக்க வகையில் பாதித்துள்ளது. இதன் விளைவாக, பல நாடுகளில் தேசியவாத மற்றும் குடியேற்றக் கட்டுப்பாட்டை வலியுறுத்தும் அரசியல் சக்திகள் ஆதரவைப் பெற்றுள்ளன.





மொராக்கோ, லிபியா, துனிசியா ஐரோப்பாவிற்கான முக்கிய நுழைவாயில்களாக அமைந்துள்ளன.

ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்குச் செல்லும் முக்கிய வழித்தடங்களில் மொராக்கோ, லிபியா மற்றும் துனிசியா முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மேற்குத் திசையில் மொராக்கோவிலிருந்து ஸ்பெயின் கரையோரங்களுக்கும், மத்திய பகுதியில் லிபியா மற்றும் துனிசியாவிலிருந்து இத்தாலியின் லம்பிடூசா தீவு மற்றும் சிசிலி பகுதிகளுக்கும் சிறிய படகுகள் மூலம் மக்கள் பயணிக்கின்றனர். இந்தப் பயணங்களில் ஈடுபடுபவர்கள் அனைவரும் ஒரே காரணத்திற்காக வருவதில்லை. சிலர் போரினாலும் அரசியல் ஒடுக்குமுறையாலும் தங்கள் நாட்டை விட்டு வெளியேறிய அகதிகள். மற்றவர்கள் வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சிறந்த வாழ்க்கையை நாடும் பொருளாதாரக் குடியேற்றவாசிகள். இந்த இரு பிரிவினரையும் வேறுபடுத்தி அணுகுவது அரசுகளுக்கு ஒரு சவாலாக உள்ளது.

## நம்பிக்கையும் ஆபத்தும் சந்திக்கும் மத்தியதரைக் கடல்:

மத்தியதரைக் கடல் உலகின் மிகவும் ஆபத்தான குடியேற்றப் பாதைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. சட்டவிரோத மனிதக் கடத்தல் வலையமைப்புகள் ஆயிரக்கணக்கான மக்களிடம் பெரும் தொகை பணம் வசூலித்து பாதுகாப்பற்ற படகுகளில் கடலுக்கு அனுப்புகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பலர் கடலில் உயிரிழக்கின்றனர். இது மனிதாபிமான நெருக்கடியை மட்டுமல்லாமல், சர்வதேச குற்றவியல் வலையமைப்புகள், மனிதக் கடத்தல், எல்லைப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் மீட்பு நடவடிக்கைகள் போன்ற பல்வேறு பாதுகாப்பு சவால்களையும் உருவாக்கியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஐரோப்பா மிகப்பெரிய அகதி வருகையை எதிர்கொண்டது. அதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் வெளிப்புற எல்லைக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல், பதிவு முறைமைகளை மேம்படுத்துதல், மனிதக் கடத்தலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மூல நாடுகளுடன் ஒத்துழைப்பை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அதே நேரத்தில், அகதிகளை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பை உறுப்புநாடுகள் எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நீடித்தன. சில நாடுகள் அதிக பொறுப்பை ஏற்றுக் கொண்டதாகவும், சில நாடுகள் போதுமான பங்களிப்பு வழங்கவில்லை என்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டன.

## நெதர்லாந்து - இத்தாலி அகதிகள் வருகை:

நெதர்லாந்தில் குடியேற்றக் கொள்கைகள் கடந்த சில ஆண்டுகளில் தீவிர அரசியல் விவாதமாக மாறியுள்ளன. வீட்டு வசதி பற்றாக்குறை, பொதுச் சேவைகளின் மீதான அழுத்தம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய அடையாளம் தொடர்பான அச்சங்கள் பொதுமக்களிடையே அதிகரித்துள்ளன. இந்தச் சூழலில் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியு



றுத்தும் அரசியல் கட்சிகள் தேர்தல்களில் குறிப்பிடத்தக்க ஆதரவைப் பெற்றுள்ளன. அதேவேளை, மனித உரிமை அமைப்புகள் மற்றும் பல குடிமக்கள் அமைப்புகள் சர்வதேச அகதிகள் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு தேவைப்படுவோருக்கு உரிய உதவி வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

இத்தாலி, குறிப்பாக லம்பிடுசா தீவு, மத்தியதரைக் கடல் வழியாக வரும் குடியேற்றவாசிகளின் முதல் நுழைவாயிலாக நீண்டகாலமாக இருந்து வருகிறது. இந்த காரணத்தால், இத்தாலி கடல்சார் மீட்பு, எல்லைக் கண்காணிப்பு மற்றும் அகதிகள் தங்குமிட முகாம்கள் போன்ற துறைகளில் பெரும் அழுத்தத்தை எதிர்கொள்கிறது.

இத்தாலி அரசுகள் பலமுறை, குடியேற்றப் பிரச்சினை தங்கள் நாட்டின் பிரச்சினை மட்டுமல்ல; முழு ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டுப் பொறுப்பு என்றும் வலியுறுத்தியுள்ளன. இதன் விளைவாக, ஐரோப்பிய அளவில் எல்லைப் பாதுகாப்பு மற்றும் அகதிகள் பகிர்வு தொடர்பான விவாதங்கள் தீவிரமடைந்துள்ளன.

### பிரான்ஸ் சமூக பாதுகாப்பு சவால்கள்:

பிரான்சில் குடியேற்ற விவகாரம் பாதுகாப்பு, மதச்சார்பின்மை, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றுடன் இணைந்து விவாதிக்கப்படுகிறது. குடியேற்றப் பின்னணியைக் கொண்ட சமூகங்களின் ஒருங்கிணைப்பு, நகர்ப்புறப் புறக்கணிப்பு மற்றும் சமூக சமத்துவமின்மை போன்ற காரணிகள் அரசியல் விவாதங்களில் முக்கிய இடம் பெற்றுள்ளன. அதேசமயம், பெரும்பாலான குடியேற்றவாசிகள் சட்டத்தை மதித்து உழைத்து சமூகத்தில் பங்களிப்பு செய்து வருகின்றனர் என்பதையும் மறுக்க முடியாது. எனவே, குடியேற்றம் தொடர்பான விவாதங்களில் பொதுமைப்படுத்தல்களைத் தவிர்ப்பது அவசியமாகிறது.

குடியேற்றப் பிரச்சினை பல ஐரோப்பிய நாடுகளில் தேசியவாத மற்றும் வலதுசாரி அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்துள்ளது. எல்லைப் பாதுகாப்பு, தேசிய கலாச்சாரப் பாதுகாப்பு, சட்டவிரோத குடியேற்றத் தடுப்பு மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற கோரிக்கைகள் பல வாக்காளர்களிடம் ஆதரவைப் பெற்றுள்ளன.

மறுபுறம், இடதுசாரி மற்றும் மத்திய அரசியல் சக்திகள் மனித உரிமைகள், சர்வதேச சட்டப் பொறுப்புகள் மற்றும் மனிதாபிமான அணுகுமுறையை வலியுறுத்துகின்றன. இதனால் ஐரோப்பிய அரசியலில் குடியேற்றம் மிகவும் பிளவுபடுத்தும் விவகாரமாக தொடர்கிறது.

### மனிதாபிமானமும் தேசிய பாதுகாப்பும்

ஐரோப்பிய நாடுகள் இன்று ஒரு கடினமான சமநிலையைத் தேடுகின்றன. ஒருபுறம், போர், ஒடுக்குமுறை மற்றும் துன்புறுத்தலிலிருந்து தப்பி வரும் மக்களுக்கு சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்க வேண்டிய கடமை உள்ளது. மறுபுறம், எல்லைப் பாதுகாப்பு, சட்டவிரோத மனிதக் கடத்தலைத் தடுப்பது, தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக வளங்களின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் அரசுகளுக்கு உள்ளது. இந்த இரண்டு நோக்கங்களுக்கும் இடையில் சமநிலையை உருவாக்குவது எளிதான காரியம் அல்ல. அதனால் தான் குடியேற்றக் கொள்கைகள் ஒவ்வொரு தேர்தலிலும் முக்கிய அரசியல் விவாதமாக மாறுகின்றன.

மொராக்கோ, லிபியா மற்றும் துனிசியா வழியாக மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவை அடையும் குடியேற்றப் பிரச்சினை ஒரு தனிநாட்டு சவால் அல்ல; அது உலகளாவிய அரசியல், பொருளாதார, மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு பரிமாணங்களைக் கொண்ட ஒரு சிக்கலான விடயமாகும்.

தற்போது நெதர்லாந்து, இத்தாலி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்தப் பிரச்சினை அரசியல் மாற்றங்களையும் தேர்தல் முடிவுகளையும் ஆழமாகப் பாதித்துள்ளது. அதேவேளை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இடையில் சமநிலையை உருவாக்கும் முயற்சி இன்னும் தொடர்கிறது.

எதிர்காலத்தில் இந்த நெருக்கடிக்கு நீடித்த தீர்வு காண வேண்டுமெனில், எல்லைக்



கட்டுப்பாட்டை மட்டும் வலுப்படுத்துவது போதுமானதாக இருக்காது. மாறாக, போர்கள், வறுமை, அரசியல் நிலையற்ற தன்மை, காலநிலை மாற்றம் மற்றும் பொருளாதார சமத்துவமின்மை போன்ற குடியேற்றத்தின் அடிப்படைக் காரணிகளை சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் எதிர்கொள்வதே நீடித்த மற்றும் மனிதநேயமான தீர்வாக அமையும்.

# சூரிச் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் சிறப்பு சொற்பொழிவு

சுவிட்சர்லாந்தின் சூரிச் அட்லிஸ்வில் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில், இறையருட் செல்வி சுமதி ஸ்ரீ அவர்கள் வழங்கும் இச்சிறப்பு ஆன்மிகச் சொற்பொழிவு, 2026 ஆவணி 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. முருகப்பெருமானின் அருளால் நடைபெறும் இந்நிகழ்வில் பக்தர்கள் மற்றும் தமிழ் உறவுகள் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு ஆலய நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.






# சூரிச் நீச்சல் நிலையங்கள் புதிய சாதனையை நோக்கி

ஆகஸ்ட் தொடக்கம் வரை சூரிச் நகரின் ஆச்ஞீடி நீச்சல் நிலையங்களில் 2.26 மில்லியன் வருகைகள் பதிவாகியுள்ளன. 2025ஆம் ஆண்டின் 2.39 மில்லியன் என்ற சாதனையை, தொடரும் வெப்பம் காரணமாக இந்த ஆண்டு விரைவில் முறியடிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.












ஐரோப்பிய நாடுகளுக்கான அமைதிப்பயணம் மேற்கொண்ட இந்தியாவின் தென்கைலாசம் என அழைக்கப்படும் திருமூர்த்தி மலையில் அமைந்துள்ள உலக சமாதான ஆலயத்தின் ஸ்தாபகரான உலக அமைதித்தூதுவர் ஜெகத்குரு பரஞ்சோதி குருமகான் பிரித்தானியா லண்டன் ஆலயங்களான லண்டன் ஸ்ரீ கற்பக வினாயகர் கோவில், லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் திருக்கோவில்களுக்கு விஜயம் மேற்கொண்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.




# சூரிச்சில் இன்று 91% சூரிய கிரகணம்

# எப்போது, எங்கே பார்க்கலாம்?

சுவிட்சர்லாந்தில் கடந்த 27 ஆண்டுகளில் காணக்கூடிய மிக வலுவான சூரிய கிரகணம் ஆகஸ்ட் 12 புதன் கிழமை மாலை நிகழவுள்ளது. சூரிச் பகுதியில் சூரியன் சுமார் 91% வரை மறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சூரிச்நேரப்படி, மாலை 7.24 மணிக்கு கிரகணம் ஆரம்பமாகி, 8.18 மணிக்கு உச்சத்தை அடையும். பின்னர் இரவு 8.42 மணியளவில் சூரிய அஸ்தமனத்துடன் பார்வையிலிருந்து மறையும். இது 1999க்குப் பின்னர் சுவிட்சர்லாந்தில் காணப்படும் மிக வலுவான சூரிய கிரகணமாகும்.

சூரிச்சில் மேற்கு-வடமேற்கு திசையில் தடையற்ற வானப்பரப்பைக் காணக்கூடிய உயரமான இடங்கள் சிறந்தவை. Uetliberg, ETH Polyterrasse, Waid/H5nggerberg, Monte Diggelmann மற்றும் Witikon பழைய தேவாலயப் பகுதி போன்ற இடங்களில் நல்ல பார்வை கிடைக்க வாய்ப்புள்ளது.

கண்களுக்கு மிக முக்கிய எச்சரிக்கை: சூரியனை வெறும் கண்களால் அல்லது சாதாரண சன் கிளாஸ் அணிந்து நேரடியாகப் பார்க்கக்கூடாது. சான்றளிக்கப்பட்ட சூரிய கிரகண பாதுகாப்புக் கண்ணாடி மட்டுமே பயன்படுத்த வேண்டும். பாதுகாப்பற்ற முறையில் பார்ப்பது விழித்திரையை நிரந்தரமாகப் பாதிக்கக்கூடும்.

மேலும், கிரகணத்திற்குப் பின்னர் புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை அதிகாலை வரை Perseids விண்கல் மழையின் உச்ச நிலையும் காணப்படவுள்ளது. நல்ல வானிலையில் ஒரே இரவில் இரண்டு அரிய வானியல் நிகழ்வுகளை ரசிக்கும் வாய்ப்பு கிடைக்கலாம்.



# 10 மில்லியன் மக்கள் வரம்புக்கு சுவிஸ் மக்கள் ஏன் 'இல்லை' சொன்னார்கள்?

சுவிட்சர்லாந்தின் மக்கள் தொகை 10 மில்லியனைத் தாண்டுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் குங்க முன்வைத்த குடியேற்றக் கட்டுப்பாட்டு முன்மொழிவு, ஜுன் 14 தேசிய வாக்கெடுப்பில் சுமார் 55% வாக்காளர்களால் நிராகரிக்கப்பட்டது. தற்



போது வெளியாகியுள்ள ஙஙீஙீ ஆய்வு, வாக்காளர்களின் முடிவுக்குப் பின்னால் இருந்த முக்கிய காரணங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த முன்மொழிவுக்கு ஆதரவளித்தவர்களில் பலர், அதிகரிக்கும் குடியேற்றம் காரணமாக வீட்டு வசதி, பொதுப் போக்குவரத்து, மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகள் மீது அழுத்தம் அதிகரிப்பதாக கருதினர். உட்கட்டமைப்பு மீதான அழுத்தம் 62% வாக்காளர்களுக்கு முக்கியமான விடயமாக இருந்ததாக ஆய்வு தெரிவிக்கிறது.

ஆனால் முன்மொழிவு தோல்வியடைய முக்கிய காரணம், 10 மில்லியன் என்ற கடுமையான மக்கள் தொகை உச்சவரம்பு நடைமுறைக்கு மிகவும் கட்டுப்பாடானது என்று பெரும்பான்மையான வாக்காளர்கள் கருதியதே ஆகும்.

குறிப்பாக, சுவிட்சர்லாந்தின் பல தொழில்துறைகள் வெளிநாட்டுத் தொழிலாளர்களை பெரிதும் சார்ந்திருப்பதால், குடியேற்றத்தை கடுமையாகக் கட்டுப்படுத்துவது தொழிலாளர் பற்றாக்குறையை அதிகரித்து பொருளாதாரத்தையும் பாதிக்கக்கூடும் என்ற அச்சம் வாக்காளர்களிடம் காணப்பட்டது.




# நாளுக்கு CHF 1,000 தருவதாக WhatsApp ல் மோசடி

## சுவிஸ் மக்களுக்கு எச்சரிக்கை

சுவிட்சர்லாந்தில் பிரபல அரசியல் தலைவர்களின் பெயர் மற்றும் புகைப்படங்களைப் பயன்படுத்தி WhatsApp வழியாக போலி முதலீட்டு மோசடி பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மோசடிக்காரர்கள் கூட்டாட்சி கவுன்சிலர் Karin Keller&Sutter மற்றும் முன்னாள் கூட்டாட்சி கவுன்சிலர் Christoph Blocher ஆகியோரின் பெயர்களைப் பயன்படுத்தி மக்களை போலி இணையதளங்களுக்கு அழைத்துச் செல்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக EthAMG 2.6 என்ற பெயரில் போலியான முதலீட்டுத் தளம் விளம்பரப்படுத்தப்படுகிறது. இதில் பதிவு செய்தால் நாளொன்றுக்கு 1,000 பிராங்குகள் வருமானம் கிடைக்கும் என்றும், முதல் மாதத்தில் சராசரியாக 40,000 பிராங்குகள் சம்பாதிக்கலாம் என்றும் பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றன.

இந்தத் தளம் Swiss National Bank மற்றும் FINMA கண்காணிப்பின் கீழ் இயங்குவதாகவும் முதலீடுகள் பாதுகாக்கப்படுவதாகவும் மோசடிக்காரர்கள் கூறுகின்றனர். ஆனால் இத்தகைய அரசாங்க அங்கீகாரம் பெற்ற முதலீட்டுத் திட்டம் எதுவும் இல்லை.

ஆரம்பத்தில் சுமார் 200 பிராங்குகள் போன்ற சிறிய தொகையை முதலீடு செய்யுமாறு கூறி, பின்னர் வெளிநாட்டு Call Centre-களிலிருந்து தொடர்புகொண்டு அதிக பணத்தை முதலீடு செய்ய அழுத்தம் கொடுப்பதே இந்த மோசடியின் முக்கிய நடைமுறையாக கூறப்படுகிறது.

சுவிட்சர்லாந்தில் இதுபோன்ற போலி ஆன்லைன் முதலீட்டுத் திட்டங்களால் ஏற்கனவே சிலர் CHF 100,000 முதல் CHF 250,000க்கும் அதிகமான தொகைகளை இழந்த சம்பவங்கள் வெளியாகியுள்ளன.

சந்தேகத்திற்குரிய WhatsApp முதலீட்டு செய்திகளில் உள்ள இணைப்புகளைத் திறக்க வேண்டாம் என்றும், பணம் செலுத்துவதற்கு முன் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் FINMA அனுமதி பெற்றதா என்பதைச் சரிபார்க்க வேண்டும் என்றும் அதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர். ஏற்கனவே பணத்தை இழந்தவர்கள் உடனடியாக பொலிஸில் புகார் அளிக்க வேண்டும்.



# சூரிச் வாழ்க்கை – அதிக செலவா? உயர்ந்த தரமா? மக்களின் கருத்துகள் மாறுபாடு

சூரிச் சுபீட்சம்: உலகின் மிகவும் விலையுயர்ந்த நகரங்களில் ஒன்றாகக் கருதப்படும் சூரிச், உயர்ந்த வாழ்க்கைத் தரம், பாதுகாப்பு மற்றும் சிறந்த உள்கட்டமைப்புக்காக புகழ்பெற்றுள்ளது. எனினும், அந்நகரின் அதிக வாழ்க்கைச் செலவு உண்மையில் அதற்கேற்ற மதிப்பை வழங்குகிறதா என்பது குறித்து குடியிருப்பாளர்களிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில், பலர் சூரிச்சில் வாழ்க்கைச் செலவு, குறிப்பாக வீட்டு வாடகை, நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு பெரும் சுமையாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். குடும்பங்கள் மாதந்தோறும் வீட்டு வாடகைக்கே ஆயிரக்கணக்கான சுவிஸ் பிராங்குகளை செலவிட வேண்டியிருப்பதாகவும், அதனால் பல தரமான சேவைகள் பொதுமக்களுக்கு எட்டாததாக மாறிவிட்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், சிலர் பொதுப் போக்குவரத்து சேவைகளில் ஏற்படும் தாமதங்கள், உணவகங்களின் அதிக விலை மற்றும் சேவைத் தரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றையும் விமர்சித்துள்ளனர்.

அதேவேளை, மற்றொரு தரப்பினர் சூரிச்சின் பாதுகாப்பான சூழல், உயர் தர கல்வி, உலகத் தரமான மருத்துவ வசதிகள், சிறந்த பொதுப் போக்குவரத்து, குழந்தைகள் வளர்ப்பதற்கு ஏற்ற சூழல் மற்றும் பல்வேறு கலாசாரங்கள் இணைந்து வாழும் சமூக அமைப்பு ஆகியவை, அந்நகரின் உயர்ந்த வாழ்க்கைச் செலவை நியாயப்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

குறிப்பாக குடும்பங்களுடன் வாழ்பவர்கள், கல்வி மற்றும் பாதுகாப்பிற்காக சூரிச்சில் வாழ்வது சிறந்த முதலீடு எனக் கருதுகின்றனர்.

சூரிச்சில் வாழ்வது மலிவானது அல்ல. ஆனால் உயர்ந்த வாழ்க்கைத் தரம், பாதுகாப்பு மற்றும் தரமான பொது சேவைகள் காரணமாக, பலருக்கு அது இன்னும் விருப்பமான நகரமாகவே உள்ளது. அதே நேரத்தில், வீட்டு வசதி மற்றும் அன்றாட வாழ்க்கைச் செலவுகளை கட்டுப்படுத்துவது எதிர்காலத்தில் சூரிச் நகரம் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய சவாலாக நிபுணர்கள் கருதுகின்றனர்.



# கர்தினால் ரஞ்சித் மற்றும் சமநீதிக்கான கேள்வி

## ஒவ்வொரு இலங்கைப் பாதிக்கப்பட்டவருக்கும் உண்மையைத் தேடும் அதே உரிமை உள்ளதா?

**ராஜ் சிவநாதன், மெல்பேர்ன், அவுஸ்திரேலியா**

பொறுப்புக்கூறல் தொடர்பான இலங்கையின் நீண்டகாலப் போராட்டம் மீண்டும் தேசிய விவாதத்தின் மையத்துக்கு வந்துள்ளது. 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு முன்னதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கத் தவறியமை தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விவாதம் தீவிரமடைந்துள்ளது.

அந்தத் தீர்ப்புகளுக்குப் பின்னர் மல்கம் கர்தினால் ரஞ்சித் மேற்கொண்ட தலையீடு கவனிக்கப்பட வேண்டியது. அவர் மரண தண்டனையை எதிர்ப்பதாலேயே அல்ல; அதைவிட ஆழமான ஒரு கேள்வியை அது இலங்கையின் முன் வைக்கிறது:

பாதிக்கப்பட்டவர்கள் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது, உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் நாம் ஒரே அளவுகோலைப் பயன்படுத்துகிறோமா?

பல ஆண்டுகளாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முழுமையான உண்மையை வெளிக்கொணர வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திய இலங்கையின் முக்கிய மதத் தலைவர்களில் கர்தினால் ரஞ்சித் ஒருவர். அந்த விடாமுயற்சி மதிக்கப்பட வேண்டும்.

ஆனால் அவரது கடந்தகால நிலைப்பாடுகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

### உயிர்த்த ஞாயிறு: உண்மைக்கான இடைவிடாத தேடல்

2019 ஏப்ரல் 21 அன்று தேவாலயங்களையும் ஹோட்டல்களையும் குறிவைத்து நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 260-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சாத்தியமான தாக்குதல் குறித்து முன்கூட்டியே புலனாய்வு எச்சரிக்கைகள் கிடைத்திருந்தன என்பது பின்னர்

வந்தபோது, அந்தத் துயரம் மேலும் அதிர்ச்சியூட்டியது.

அதனால், தாக்குதல்களை நேரடியாக மேற்கொண்டவர்களை மட்டும் தண்டிப்பது போதாது என்று கர்தினால் ரஞ்சித் வலியுறுத்தினார். தாக்குதலைத் திட்டமிட்டவர்கள் யார், உதவியவர்கள் யார், அதன் பின்னால் வேறு சக்திகள் இருந்தனவா, கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் ஏன் உயிரிழப்புகளைத் தடுக்கப் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் அவர் மீண்டும் மீண்டும் கேட்டார்.

அடுத்தடுத்த ஆண்டுகளிலும் நம்பகமான விசாரணையும் முழு உண்மை வெளிப்படுத் தப்படுவதும் அவசியம் என்று பல அரசாங் கங்களின் மீது அவர் அழுத்தம் கொடுத்தார்.

பாதிக்கப்பட்ட தனது சமூகத்தின் சார்பாக ஒரு மதத் தலைவர் மேற்கொள்ள வேண்டிய இயல் பான நடவடிக்கையாக இதைக் காணலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட வர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் பதில்கள் தேவை.

ஆனால் மற்ற இலங்கைப் பாதிக்கப்பட்டவர் களுக்கும் அதே உரிமை உள்ளது.

**போரில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பற்றி என்ன?**

இங்குதான் கர்தினால் ரஞ்சித்தின் வர லாற்றுப் பதிவுகள் முக்கியத்துவம் பெறுகின் றன.

தமிழர்களின் குறைகளை அவர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவது நியாயமல்ல.

2010 ஆம் ஆண்டு கற்றுக்கொண்ட பாடங் கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் கருத்துத் தெரிவித்தபோது, இனப்பிரச் சினையின் வரலாற்று வேர்கள் குறித்தும், 'சிங்களம் மட்டும்' கொள்கையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் கர்தினால் ரஞ்சித் பேசி னார். அரசியல் தீர்வு தேவை என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட கடுமையான மீறல்கள் சர்வதேச விவகாரமாக மாறியபோது, அவரது நிலைப்பாடு மிகவும் எச்சரிக்கையானதாக இருந்தது.

வடக்கைச் சேர்ந்த தமிழ் கத்தோலிக்க ஆயர் கள் போர்க்கால மீறல்கள் குறித்த குற்றச்ச ாட்டுகளை முன்வைத்தபோது, அவற்றில் சிலவற்றிலிருந்து இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையை கர்தினால் ரஞ்சித் விலக்கிக் காட்டினார்; அவை சம்பந்தப்பட்ட ஆயர்களின் தனிப்பட்ட கருத்துகள் என்ற நிலைப்பாட்டை எடுத்தார்.

இலங்கையின் பொறுப்புக்கூறல் செயல்மு றையில் வெளிநாட்டு தலையீட்டையும் அவர் எதிர்த்தார். அந்த வரலாற்றை எளிதில் மறந் துவிட முடியாது.

எனவே கேள்வி, கர்தினால் ரஞ்சித் தமிழர் களை ஆதரித்தாரா அல்லது ராஜபக்சக்களை ஆதரித்தாரா என்பதல்ல.

முக்கியமான கேள்வி இதுதான்:

தமிழ் குடும்பங்கள் பதில்களைத் தேடிய



போது, முழுமையான உண்மையை வெளிக் கொணர வேண்டும் என்ற கொள்கை ஏன் இதே தீவிரத்துடன் முன்னெடுக்கப்படவில்லை?

**முள்ளிவாய்க்காலில் ஒரு தாய்; நீர்கொழும்பில் ஒரு தாய்**

அரசியலை விட அடிப்படைக் கொள்கையைப் பார்ப்போம்.

நீர்கொழும்பிலுள்ள ஒரு தேவாலயத்தில் தனது குழந்தையை இழந்த தாய்க்கு யார் பொறுப்பு என்பதை அறியும் முழு உரிமை உள்ளது.

முள்ளிவாய்க்காலில் போரின் இறுதிக்கட் டத்தில் தனது குழந்தையை இழந்த ஒரு தாய்க்கும் அதே உரிமை உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஒரு கத்தோலிக்கக் குடும்பம், உயிரிழப்புக ளைத் தடுக்கக்கூடிய புலனாய்வுத் தகவல்கள் அரச அதிகாரிகளிடம் இருந்தனவா என்பதை அறிய உரிமையுடையது.

அதேபோல் காணாமல் போன, சரணடைந்த அல்லது கடைசியாக அரச காவலில் காணப் பட்ட தனது உறவினருக்கு என்ன நடந்தது என்பதை அறிய ஒரு தமிழ் குடும்பத்துக்கும் உரிமை இருக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறுக்கு ஒரு அறநெறி அளவு கோலும், உள்நாட்டுப் போருக்கு வேறு ஒரு அளவுகோலும் இருக்க முடியாது.

மனித துயரத்தின் மதிப்பு இனம், மதம் அல் லது புவியியல் அடிப்படையில் அதிகமாகவோ குறைவாகவோ மாறுவதில்லை.

மரண தண்டனையை சரியான சூழலில் புரிந்துகொள்ள வேண்டும்

இங்குதான் கர்தினால் ரஞ்சித் மீதான விமர் சனமும் நியாயமானதாக இருக்க வேண்டும்.

உடனடியாக நிகழக்கூடிய பயங்கரவாதத் தாக்குதல் குறித்த புலனாய்வு எச்சரிக்கை இருந்தபோதிலும் நடவடிக்கை எடுக்கத் தவறி யமை தொடர்பாக பெர்னாண்டோவும் ஜயசுந் தரவும் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட னர். இருவருக்கும் மேல்முறையீட்டு உரிமை தொடர்கிறது என்று மீனுதீண்டுடிணனு செய்தி குறிப்பிடுகிறது.

கர்தினால் ரஞ்சித்தின் எதிர்ப்பு குறிப்பாக



மரண தண்டனைக்கே ஆகும்.

பொறுப்புக்கூறல் இருக்கக்கூடாது என்று அவர் கூறவில்லை.

கத்தோலிக்க திருச்சபை மரண தண்டனையை எதிர்க்கிறது. உயிர்த்த ஞாயிறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவை என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே கர்தினால் ரஞ்சித் அந்தக் கொள்கையைப் பேணி வருகிறார்.

இதில் இயல்பாகவே முரண்பாடு இல்லை.

ஒருவர் தூக்குத் தண்டனையை எதிர்த்துக் கொண்டே வழக்குத் தொடரல், தண்டனை மற்றும் பொறுப்புக்கூறலைக் கோர முடியும்.

எனவே கர்தினால் ரஞ்சித்திடம் கேட்க வேண்டிய வலுவான கேள்வி, இந்த இருவரும் தூக்கிலிடப்படுவதை நீங்கள் ஏன் விரும்பவில்லை? என்பதல்ல.

அதற்குப் பதிலாக: ஒவ்வொரு இலங்கைத் துயரத்தின் முழு உண்மையையும் கண்டறிவதற்கும் இதே உறுதி ஏன் பயன்படுத்தப்படக்கூடாது? என்பதே முக்கியமான கேள்வி.

### அலட்சியமும் பொறுப்புக்கூறலுக்குரியது

பெர்னாண்டோ-ஜயசுந்தர வழக்கு இன்னொரு முக்கியமான கொள்கையை முன்வைக்கிறது.

அவர்கள் தற்கொலைக் குண்டுகளை வெடிக்கச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படவில்லை. தாக்குதல்களுக்கு முன்னர் மூத்த அரச அதிகாரிகளாக அவர்கள் மேற்கொள்ளத் தவறிய நடவடிக்கைகளே வழக்கின் மையமாக இருந்தன.

பேரழிவை ஏற்படுத்தக்கூடிய அலட்சியத்திற்காக மூத்த அதிகாரிகளைப் பொறுப்புக் கூறச் செய்ய முடியும் என்றால், அந்தக் கொள்கையை இலங்கை தொடர்ந்து ஒரே மாதிரியாகப் பயன்படுத்தத் தயாராக இருக்க வேண்டும்.

பெருமளவு வன்முறைகள் நிகழ்ந்த பிற காலங்களில் அரச நிறுவனங்களின் நடத்தை அல்லது தோல்விகள் குறித்து நம்பகமான குற்றச்சாட்டுகள் இருப்பின், அவற்றுக்கும் முறையான விசாரணை அவசியம்.

கிறிஸ்தவர்கள் கொல்லப்படும்போது பொறுப்புக்கூறல் அவசியமாகவும், போரைக் குறித்து தமிழர்கள் கேள்வி எழுப்பும்போது அது அரசியல் ரீதியாக அசௌகரியமானதாகவும் மாற முடியாது.

முஸ்லிம்கள், சிங்களவர்கள் அல்லது வேறு எந்த சமூகத்தினரும் பாதிக்கப்படும்போதும் பொறுப்புக்கூறல் மறக்கப்படக் கூடாது.

நீதி அனைவருக்கும் சொந்தமானதாக இருக்க வேண்டும்; இல்லையெனில் இறுதியில் அது யாருக்கும் சொந்தமானதாக இருக்காது.

### கர்தினால் ரஞ்சித் மற்றும் அரசியல்

இன்னொரு சிரமமான கேள்வியும் உள்ளது.

இலங்கையின் அரசியல் விவாதங்களில் கர்தினால் ரஞ்சித் செல்வாக்குமிக்க குரலாக மாறியுள்ளார்.

இதில் இயல்பாகவே தவறு ஒன்றும் இல்லை.

இலங்கையின் பௌத்த மதகுருமார்கள் நீண்டகாலமாக அரசியல் மற்றும் தேசிய விவகாரங்களில் தீவிரமாகப் பங்கேற்றுள்ளனர். இந்து, கிறிஸ்தவ அல்லது முஸ்லிம் மதத் தலைவர்களுக்கு மட்டும் மௌனமாக இருக்க வேண்டும் என்று கூறுவது நியாயமல்ல.

எனவே அரசாங்கங்களை விமர்சிக்கவும், தனது சமூகத்தைப் பாதுகாக்கவும், விசாரணைகளைக் கோரவும், தேசிய விவகாரங்களில் கருத்துத் தெரிவிக்கவும் கர்தினால் ரஞ்சித்துக்கு முழு உரிமை உள்ளது.

ஆனால் அரசியல் செல்வாக்குடன் பொதுமக்களின் ஆய்வும் விமர்சனமும் வருகின்றன.

ஆன்மீகத் தலைமைக்கும் கட்சிசார் அரசியலுக்கும் இடையிலான எல்லையை பௌத்த பிக்குகள் கடக்கும்போது அவர்கள் விமர்சிக்கப்படுகிறார்கள் என்றால், அதே அளவுகோல் ஒரு கர்தினாலுக்கும் பொருந்த வேண்டும்.

எந்த மதப் பதவியும் ஒருவரை நியாயமான பொதுக் கேள்விகளுக்கு அப்பாற்பட்டவராக மாற்றக்கூடாது.

மதத் தலைவர்கள் பேசலாமா என்பது முக்கியமான கேள்வியல்ல.

அவர்கள் தமது அறநெறிக் கொள்கைகளை அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்துகிறார்களா என்பதே முக்கியம்.

### கர்தினால் ரஞ்சித்துக்கு ஒரு வாய்ப்பு

கர்தினால் ரஞ்சித்தை தனிப்பட்ட முறையில் தாக்குவதற்குப் பதிலாக, அவரிடம் மிகவும் ஆக்கபூர்வமான ஒரு வேண்டுகோளை முன்வைக்கலாம்.

மேன்மைதங்கிய கர்தினால் அவர்களே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முழுமையான உண்மையைத் தொடர்ந்து கோருங்கள்.

அந்தத் தாக்குதல்களை யார் திட்டமிட்டார்கள், நிதியளித்தார்கள், உதவினார்கள் அல்லது நடைபெற வழிவகுத்தார்கள் என்பதை நிறுவாமல் அரசியல் தலைவர்கள் விசாரணையை முடிவுக்குக் கொண்டுவர அனுமதிக்காதீர்கள்.

உயிர்த்த ஞாயிறு பாதிக்கப்பட்டவர்கள் அதைவிடக் குறைவான எதற்கும் தகுதியற்றவர்கள்.

ஆனால் அதே அறநெறிக் கொள்கையை பதில்களைத் தேடும் ஒவ்வொரு இலங்கை குடும்பத்திற்கும் விரிவுபடுத்துங்கள்.

தமிழ் தாய்மார்கள் தமது காணாமல் போன பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கேட்கும்போது, அதே இரக்கத்துடன் அவர்களையும் கேளுங்கள்.



போரின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்று குடும்பங்கள் கேட்கும்போது, உண்மையை அறியும் அவர்களது உரிமையை ஆதரியுங்கள்.

அரச நிறுவனங்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் எழும்போது, அரசை விசாரிப்பது நாட்டைத் தாக்குவதாகக் கருதாமல், நம்பகமான விசாரணைகளை ஆதரியுங்கள்.

பொறுப்புக்கூறல் என்பது சிங்கள மக்கள், இராணுவம், கத்தோலிக்கர்கள், முஸ்லிம்கள், தமிழர்கள் அல்லது வேறு எந்த சமூகத்தின் மீதும் கூட்டுப்பழி சுமத்துவதாக இருக்கக்கூடாது.

தனிநபர் மற்றும் நிறுவனப் பொறுப்புகள் ஆதாரங்களின் அடிப்படையிலும் உரிய சட்ட நடைமுறைகளின் மூலமும் நிரூபிக்கப்பட வேண்டும்.

ஒரே நாட்டில் இரண்டு நீதித் தரங்கள் இருக்க முடியாது

முந்தைய துயரங்களை முழுமையாக எதிர்கொள்ளாமலேயே இலங்கை பல தசாப்தங்களாக ஒரு துயரத்திலிருந்து இன்னொரு துயரத்துக்குச் சென்றுள்ளது.

உள்நாட்டுப் போர் முடிந்தது. கேள்விகள் மீதமிருந்தன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்தது. கேள்விகள் இன்னும் உள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விடயங்கள் தீர்க்கப்படவில்லை. அரசியல் கொலைகள் குறித்த சர்ச்சைகள் தொடர்கின்றன. பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் காத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு அரசாங்கமும் விசாரணைகளை வாக்குறுதி அளிக்கிறது; ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன; அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன; ஆண்டுகள் கடந்து செல்கின்றன.

இந்தச் சுழற்சி முடிவுக்கு வர வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முழு உண்மையைக் கண்டறிய வேண்டும் என்ற கர்தினால் ரஞ்சித்தின் வலியுறுத்தல் இலங்கைக்கு ஒரு முக்கியமான கொள்கையை வழங்குகிறது.

அதை அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்துவோம்.

அரசு வலிமையானது என்பதை நிரூபிப்பதற்காக மட்டும் மனிதர்களைத் தூக்கிலிட வேண்டாம். செல்வாக்குள்ளவர்களை விசாரிப்பது அரசியல் ரீதியாக அசௌகரியமானது என்பதற்காக அவர்களைப் பாதுகாக்க வேண்டாம்.

நமது சொந்த சமூகத்தினர் பாதிக்கப்படும் போது மட்டும் உண்மையைத் தேட வேண்டாம்.

நாம் நமக்காகக் கோரும் நீதியை மற்றொரு சமூகத்துக்கு மறுக்க வேண்டாம்.

முள்ளிவாய்க்காலில் ஒரு தாயும் நீர்கொழும்பில் ஒரு தாயும் நீதியின் முன் சமமாக நிற்க வேண்டும்.

இது கர்தினால் ரஞ்சித்துக்கான சோதனை மட்டும் அல்ல.

பௌத்த மதத் தலைவர்கள், தமிழ் அரசியல் தலைவர்கள், அரசாங்கங்கள், எதிர்க்கட்சிகள், நீதித்துறை, சிவில் சமூகம் மற்றும் இறுதியில் ஒவ்வொரு இலங்கையருக்குமான சோதனையாகும்.

உண்மைக்கு இனம் இருக்கக்கூடாது.

நீதிக்கு மதம் இருக்கக்கூடாது.

பொறுப்புக்கூறலுக்கு அரசியல் கட்சி இருக்கக்கூடாது.

பாதிக்கப்பட்டவர் யார் என்பதைப் பொறுத்து இரக்கம் மாறக்கூடாது.

அத்தகைய இலங்கையைத்தான் நாம் உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

ஆதாரக் குறிப்பு

11 ஆகஸ்ட் 2026 Newsline இதழில் வெளியான Justice & But Not the Gallows செய்தி/பகுப்பாய்வு, கர்தினால் ரஞ்சித்தின் தற்போதைய மரண தண்டனை எதிர்ப்பு மற்றும் ஈஸ்டர் தாக்குதல் பொறுப்புக்கூறல் நிலைப்பாட்டிற்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கட்டுரை மரண தண்டனையை எதிர்ப்பதையும் பொறுப்புக்கூறலை எதிர்ப்பதையும் தெளிவாக வேறுபடுத்துகிறது.



சின்னத்தம்பி
குருபரன்

# இலங்கையில் எட்டாக் கனியாகிப் போன சமாதானப் பேச்சுவார்த்தைகளும் கைநழுவவிட்ட தரப்புக்களும்

கௌதம புத்தர் இருமுறை இலங்கைக்கு விஜயம் செய்த போதும் இலங்கை பௌத்த துறவிகள், கடும்போக்குவாத பௌத்தர்களிடம் இலங்கையில் பௌத்தம் நிலை நிறுத்தப்பட வெண்டும். இலிங்க வழிபாட்டை கடைப்பிடிக்கும் இயக்கர்கள் (தமிழர்கள் அதற்குத் தடையாக இருப்பார்கள். ஆகையினால் அவர்களை இத்தீவிலிருந்து அகற்ற வேண்டும். அதற்கு நமக்கு நாகர்கள் நமக்குத் துணையாக இருப்பார்கள் அதன் அடிப்படையில் மகியங்கனை, தாந்தமலை, திப்புலாகலை, பொலநறுவை, உறுகுணை பொன்ற இடங்களில் இருந்த பூண்டோடு அழிக்கப்பட்டார்கள். குவேனி உட்பட எஞ்சி இருந்தவர்களில் பெரும்பாலானோர் விஜயன், அவனது படையினர், கடும்போக்குவாத பௌத்தர்கள், நாகர்களால் அழிக்கப்பட்டார்கள் என்பது பௌத்த, சிங்கள வரலாற்றுச் சான்று. இதனை மகாவம்நமும் கூறுகிறது.

மகாவம்ச காலத்தில் இருந்து இன்றுவரை இலங்கைத் தமிழர்களை அந்நியர்களாகவும் சிறுபான்மையினர்களாகவும் பார்க்கும் இனத்துவப் போக்கொன்று வளர்ந்து வேரூன்றி இருப்பதை கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம். இப்போக்கு 1939 ஆம் ஆண்டிலிந்து இலங்கையின் அரசியல், பொருளாதாரம், கல்வி, குடியேற்றம், காணிச் சுவிகரிப்பு என்பவற்றில் புறக்கணிப்பு இடம்பெற்று வந்திருப்பதை அப்பட்டமாகக் காணமுடிகின்றது. இது சிறுபான்மையினர் நலனுக்குப் பாரிய சவாலக அமைகிருந்தன. இந்த விடயத்தை வரலாற்று ரீதியாக நோக்குவதே இக்கட்டுரையாகும்.

திருமூலர் சிவபூமி எனக் குறிப்பிடும் இலங்கையைச் சிவபக்தனாகிய இராவணன் ஆட்சி செய்தான் என கம்பராமாயணம் கூறுகின்றது. பின்னர் யக்சர்களும் இயக்கர், நாகர் எனப்படும் ஆதிக்குடிவாசிகளும் ஆண்டனர் என்பதை அறிகின்றோம். ஆதற்குப் பின்னர் இந்தியத் தொடர்புகள், மேலாதிக்கம் காரணமாக இந்தியப் பேரரசர்கள், குறுநில மன்னர்கள், வியாபாரிகள், அதன் பரம்பரையினர் போன்றோரும். இலங்கை மன்னர்களும் ஆட்சி செய்தனர் என்பதை நூல்கள், கல்வெட்டுக்கள், ஆதாரங்களினூடாக அறிய முடிகின்றன. அதன் பின்னர் 1505 முதல் 1948 வரை ஏறக்குறைய நான்கரை நூற்றாண்டுகள் ஐரோப்பியர்கள் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது.

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் உறுகுணையை (மகாகம) ஆட்சி செய்த துட்டகைமுனு அனுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன் எல்லாளனை யுத்தத்தில் வெற்றி கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினான் என மகாவம்சம் கூறுகின்றது. இலங்கையை ஆட்சி செய்த பெரும்பாலான சிங்கள மன்னர்களுக்குக் குருவாக, மந்திரிமார்களாக, புரோகிதர்களாகத் தமிழர்களும் தமிழ் பிராமணர்களுமே இருந்து வந்திருக்கின்றனர் என்பதனை வரலாற்றுச் சான்றுகள் நிரூபிக்கின்றன.

இவ்வாறு இருக்கையில் விஜயன் ஆட்சிக் காலம் மதல் இன்றுவரை எழுதப்பட்ட சிங்கள வரலாறுகள் யாவற்றிலும் தமிழ் மக்கள் தொடர்பான துவேசப் போக்கொன்று கடைப்பிடிக்கப்பட்டு சிங்கள அரசர்களையும் மக்களையும் முன்னுரிமைப் படுத்தி வந்திருப்பதனை அவதானிக்கலாம். 1972 இன் பின்னர் பாடசலைகளில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் வரலாற்றுப் பாடநூல்களில் தமிழ் மன்னர்களை வெற்றி கொண்ட சிங்கள மன்னர்களை மாத்திரம் கதாநாயகர்களாகச் சிறப்பித்தும் மிகைப்படுத்தியும் புனைந்துரைக்கப்பட்ட வரலாற்றுப் பாடமே கற்பிக்கப்படுகின்றன. சேர, சோழ, பாண்டிய, கலிங்க, நாயக்க மற்றும் அரியச் சக்கரவர்த்திகள் பலர் குறிப்பாக சோழ, கலிங்க மன்னர்கள் இலங்கையைச் சூறையாடிச் சென்றார்கள் என்றும், கொடுங்கோல் ஆட்சி நடத்தினார்கள் என்றும் பௌத்த மதத்துக்கும், சிங்களவர்களுக்கும் ஊறு விழைவித்தார்கள் எனவும் கூறி மறைமுகமாக இனவாதம் திணிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில் வரலாறு பாட நூலாக்கக் குழுவில் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சார்ந்த எவரும் உள்வாங்கப்படுவதில்லை. பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களை மாத்திரம் உள்ளடக்கி, பௌத்த சிங்கள வீரதீர வரலாற்றினையும் அதன் கலாசாரத்தினையும் திட்டமிட்டு உள்ளடக்கியுள்ளனர். சிங்கள மொழியில் எழுதப்பட்ட வரலாற்று நூலினைத் தமிழில் மொழி பெயர்த்து தமிழ் மொழிப் பாடநூலை உருவாக்க மாத்திமே சிறுபான்மையினர் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். இதில் 2015 ஆம் ஆண்டில் இருந்து கற்பிக்கப்படும் வரலாறுப் பாட நூலாக்கக் குழுவில் சிறுபான்மையினர் பேருக்காகச் சேர்த்துக் கொள்ளப்படடிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

அனுராதபுர இராசதானி முதல் கொழும்பு, கண்டி இராசதானி வரையிலான ஆட்சிக் காலங்களில் எழுதப்பட்ட பல தமிழ் சாசனங்களும் கல்வெட்டுக்களும் சுவடிகளும் அவ்விடங்களில் காணப்பட்டிருந்தன. அவற்றுள் பல திட்டமிட்டு மறைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உள்ளன என்பது யதார்த்தமாகும். 1796 ஆம் அண்டு பிரித்தானியக் கிழகிந்தியக் கம்பனி இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி 1798 வரை ஆட்சி செய்தது. 1798 - 1802 வரை இரட்டை ஆட்சி முறையும் (கம்பனியும் பிரித்தானிய அரசும்) 1802-1815 வரை பிரித்தானிய முடியின் கீழான ஆட்சியும், 1815 இல் மலையகம் (கண்டி) கைப்பற்றப்பட்டதில் இருந்து 1948 வரை முழு இலங்கையையும் பிரித்தானியரே ஆட்சி செய்து வந்தனர். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தாலும் 1972 வரை பிரித்தானிய டொமினியன் அந்தஸ்திலான ஆட்சி முறையே இலங்கையில் இருந்து.

1796 - 1948 வரையிலான பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் அவர்களின் அதிகாரம், நிர்வாகம், வர்ததகம் ஆகிய துறைகளை வலுப்படுத்த 1833, 1912, 1920, 1924, 1931 ஆகிய ஆண்டுகளில் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் ஊடாக பிரதேச வாரி, இனவாரி பிரதிநிதித்துவ முறையினை முன்மொழிந்து பிரித்தாழும் தத்துவத்தினூடாக ஆட்சியை நடாத்திச் சென்றனர். 1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பின் 29 ஆம் சரத்தின் ஏ, பி, சி பிரிவுகளில் சிறுபான்மையினர் நலன்பேணல், பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமையின் சில பிரிவுகள்; சேர்க்கப்படடிருந்தன. இவை பெரும்பான்மையினரின் இனபீதியிலான சில செற்பாடுகளுக்குப் பாதிப்பாக இருந்தமையினால் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பில் திட்டமிட்டு நீக்கப்பட்டன.

1948 - 1972 வரை உள்ள காலப்பகுதியில் இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டங்களும் திருத்தங்களும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின. இவை நாட்டில் இனக் கலவரம், வன்முறை, போராட்டங்களையும் தோற்றுவித்துப் பல உயிர், பொருள் சேதங்களையும் ஏற்படுத்தியதோடு தழிழ் மக்களின் வரலாற்றில் மாறாத வடுவினையும் தோற்றுவித்தன. 1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம், வாகனங்களின் இலக்கத் தகடுகளில் ஆங்கில எழுத்தை நீக்கி ஸ்ரீ எனும் சிங்கள எழுத்தைப் பயன்படுத்துதல் தொடர்பான சட்டமூலம், நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் (கல்லோயா, உடவளவை, மகாவலி நீர்ப்பாசனப் பலநோக்கு அபிவிருத்தித் திட்டம்) திட்டமிட்ட அடிப்படையில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் தேசபிதா டீ.எஸ்.சேனநாயக்கா, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர. ஜெயவர்த்தனா தலைமையில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டன. இவை இன்றுவரையும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த விடாமல் மேற்கொள்ளப்பட்ட ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டப் பேரணிகள், பாத யாத்திரைகள், ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள், பதாதைகள் இனவாதத்தை அப்பட்டமாகத் தூண்டியதோடு ஒப்பந்தங்களும் கிடப்பில் போடப்பட்டன. இவ்விரு ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்த விடாமல் தடுப்பதில் தலைமை தாங்கிச் செயற்பட்டவர்; முன்னாள் ஜனாதிபதி

ஜெ.ஆர் ஜயவர்த்தனா ஆவார். இவர் பண்டா - செல்வா ஒப்பந்தத்தைத் தடுப்ப தற்காக்க் கண்டியில் இருந்து கொழும்புக்கு மிகப்பெரிய பாதயாத்திரை ஒன்றை நடாத்திச் சென்றார். இப்பாத யாத்திரை வரலாற்றில் மிகப் பிரமாண்டமான பாத யாத்திரையாகக் கொள்ளப்படுகிறது.

இலங்கை வரலாற்றில் சிறுபான் மையினர் தொடர்பாகப் பல அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அவற் றுள் பல முளையிலேயே கிள்ளி எறியப்பட் டன. இன்னும் சில வேரோடு பிடுங்கி எறி யப்பட்டன. இன்னும் பலகாய்த்துக் காயாக இருக்கும்போது பறித்தெடுக்கப்பட்டன. ஒரு சில கருகிய சருகாக இன்றும் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. இந்த அரசியல் தீர்வு முயற்சிகளில் பல வேரோடு பிடுங்கி எறி யப்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த தலைவர்களான டி.எஸ்.சேனநாக் கா, ஜே.ஆர் ஜெயவர்த்தனா, ரனில் விக் கிரமசிங்கா ஆகியோர் காரணமாக இருந்தி ருக்கிறார்கள். அதிலும் ஜே.ஆர். ஜெயவர்த் தனாவின் பங்கு அதிகம் என்றே கூறலாம். ரனில் கட்சிகளைப் பிரிப்பது. கலைப்பது, துண்டாடுவது, தனக்கு எதிராகச் செயற்பட் டவர்களைப் பழி வாங்குவது போன்ற காரி யங்களைத் தனது காலத்தில் செவ்வனே செய்து முடித்திருக்கினறார். இன்னும் பல தமிழ் தலைவர்களினதும் கட்சிகளினதும் தூரநோக்கற்ற செயற்பாடுகள் காரணமா கவும், பேச்சுவார்த்தை மேசைக்கு தூரநோக் குடைய தீர்வுத் திட்டங்களை முன்வைக் காது காலத்தைக் கழித்தமையினாலும் கைநழுவிப் போயின. அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகளும் சில ஆரம்பகாலப் போராட்டக் குழுக்களும் காரணமாக இருந் திருக்கின்றனர். கோரிக்கை விடுக்கும் போது வழங்க முடியாத திட்டங்களை முன்வைத்துக் காலத்தைக் கடத்தக் காரணமாக இருந்த னர். பலமுறை சமஸ்டித் தீர்வுப் பொதிகளை முன்வைத்தபோது கைநழுவ விட்டிருக்கின் றனர். இவைகளைச் சாக்குப் போக்காகக் கொண்டு சிங்களத் தலைவர்கள் காலத்தை இழுத்தடித்துத் திட்டங்களைக் கைவிட்டனர்.

இலங்கையின் வரலாற்றில் 1920 இன் பின்னர் சாதகமாக இருந்த வாய்ப்புக்களும், முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு யோச னைகளும், பேச்சு வார்த்தைகளும், சறுக்கல் களும். சுதந்திரத்துக்கு முன்னர் இவ்வாறு தான் சறுக்கின. 1920, 1924 ஆகிய யாப்புச் சீர்தீத்தங்களின் மூலம் மத்திய மலை நாடு, கரையோரம், வடக்குக் கிழக்கு என மூன்று மானிலங்களுக்கான சுயாடசி முறையிலான சமஸ்டித் தீர்வினை மலையகச் சிங்களத் தலைவர்கள் முன்வைத்தபோது அதனைத் தமிழ் தலைவர்கள் ஏற்க மறுத்தனர். 1924 - 1930 வரை பிரித்தானியாவில் கற்ற முற்போக்குவாதியான எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா பிரித்தானியர் ஆட்சியில் இருந்து சமஸ்டி முறையிலான சுயாட்சித் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டார். அதற்குத் தமிழ் தலைவர்கள் உடன்படாது தட்டிக் கழித்தனர். 1927 - 1931 வரை டொனமூர் ஆணைக் குழு முன்னிலையில் சிங்களத் தலைவர்கள் முன்வைத்த மானில சுயாட்சி முறையிலான சமஸ்டித் தீர்வினையும் தூரநோக்கில்லாமல் தமிழ் தலைவர்கள் ஏற்க மறுத்தனர். 1945 இல் சிங்களப் பெரும்பான்மை விகிதாச ார்ததைக் கணக்கிலெடுக்காது தமிழ் தலை வர்கள் 50 க்கு 50 கேட்டு விடாப்பிடியாக நின்று கிடைக்க இருந்த சமஸ்டி வாய்ப் பிடியும் கைநழுவ விட்டனர். இவ்வாறுதான் சிறுபான்மையினருக்குக் கிடைக்க இருந்த வாய்ப்புக்களைத் தமிழ் தலைமைகளின் தூரநோக்கற்ற சிந்தனைகளால் நாம் கைந ழுவ விட்டிருக்கிறோம்.

1948 இன் பின்னர் சந்தர்ப்பங்கள் சறுக் குவதற்குப் பெரும்பாலான சிங்களத் தலை வர்களும் பௌத்த பிக்குகளும் காரணமாக இருந்திருக்கின்றார்கள். அவற்றுள். 1957- பண்டா - செல்வா ஒப்பந்தம. ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் கண்டி- கொழும்பு பாத யாத்திடியினாலும் ஐக்கிய தேசியக் கடசியின் கடும் எதிர்பினாலும் கிழித்தெறியப்பட்டது. 1957 இல் பிராந்திய சபைகள் தொடர்பான முன்மொழிவு முன்வைக்கப்பட்டு அதுவும் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. 1963 இல் முன்மொழியப்பட்ட மாவட்ட ச பைகள் யோசனையும் கிடப்பில் போடப் பட்டது. 1965 ட்டலி- செல்வா ஒப்பந்தம் ஜே. ஆர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட சியின் எதிர்ப்பால் முடக்கப்பட்டது. 1965 இல் சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் என்.எம் பெரேரா முன்வைத்த சமஸ்டி அடின்னடை யிலான தீர்வுத் திட்டம் தமிழ் தலைவர்களின் ஆர்வமின்மையால் கருவிலே கைவிடப்பட் டது. 1980 இல் தென்னக்கோன் அறிக்கை. அதுவும் கருவில் கைவிடப்பட்டது. 1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் யோசனை ஆரவாரமின்றி கல்லறைக்குள் சென்றுவிட் டது. 1983 இல் மாவட்ட மட்ட அதிகாரப் பரவ லாக்கம் தொடர்பான யோசனை 1984 இல் செயற்பட ஆரம்பித்து 1985 இல் அரசினால் கைவிடப்பட்டது. 1985 இல் இரண்டு தமிழ் மாகாணம் என்ற யோசனை. முளையிலே கைவிடப்பட்டது. 1985 திம்புப் பேச்சுவார்தை முத்தரப்பிடமும் உறுதியான திட்டங்கள், மற்றும் தூரநொக்கின்மையால் இடைநடு வில் கைவிடப்பட்டது. 1987 இல் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கை. இது 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதை


போல் காய்ந்த சருகாகிப் பல வருடங்கள் இயங்காமல் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. 13 சங்கை ஊதிக் கெடுத்து ரனில் விக்கிரமசிங்கா 92023) நடத்திய நாடகத்தால் பெரும்பான்மை சிங்கள மக்கள் மற்றும் பௌத்த துறவிகளிடம் இனவாதம் மறுபடியும் விஸ்வரூபம் எடுத்திருந்தது.

1992 இல் நாடாளுமன்ற தெரிவுக் குழு அறிக்கை. இதுவும் கைவிடப்பட்டது. 1995 இல் சந்திரிக்காவின் பிராந்தியங்களின் ஒன்றியம் தொடர்பான முன்மொழிவை முன்வைத்தார். அதுவும் முளையிலே கைவிடப்பட்டது. 1997 இல் ஒஸ்லோ பிரகடனமும் கைவிடப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் சந்திரிக்காவின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைகள் தொடர்பான தீர்வுத் திட்டம் ரனில் விக்கிரமசிங்காவால் பாராளுமனறத்துக்குள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. 2002 முதல் 2005 வரை நோர்வேயின் மத்தியஸ்தத்தில் (எரிக் சொல்கெயிம்) ஒஸ்லோவில் நடைபெற்ற நீண்ட பேச்சுவார்தை விட்டுக்கொடுப்பின்றிய பிடிவாதத்தினால் கைவிடப்பட்டது. அதற்கு ரனில், மகிந்த, தமிழீழ விடுதலைப் புலிகளும் காரணமாக இருந்தனர். இதனைப் புஷ்வாணமாக்குவதில் பாரிய பங்களிப்புச் செய்தவர் ரனில் விக்கிரமசிங்கா. 2003 இல் மீண்டும் சந்திரிக்காவின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான தீர்வுத் திட்டம் சிங்கள சிறுபான்மைக் கடசிகளின்; எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. 2005 இல் சுனாமிக்குப் பின்னரான பொதுக் கட்டமைப்பு தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது. அதனை மக்கள் விடுதலை முன்னணியினர் தடுத்தனர். 2009 இல் மகிந்தவின் 13 பிளஸ் தொடர்பான யோசனை. இது முளையிலே கைவிடப்பட்டது. 2015-2019 வரை ரனில் சம்பந்தர் கூட்டிலான 'எக்கய இராச்சிய' முயற்சி. பிரிககப்படாத, பிளவுபடாத நாட்டுக்குள் சமஸ்டி யோசனை. இது கிடப்பில் கிடக்கிறது.

1985 முதல் 2007 வரை இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களும் முயற்சிகளும் தமிழீழ விடுதலைப் புலிகள் சமபலத்தோடு இருந்தபோது முன்வைக்கப்பட்டன. ஊள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழரின் சமபலம் கேள்விக்குறி ஆகின. 2023 இல் ஜனாதபதி ரனில் விக்கிரமசிங்கா தமிழர்களின் பலத்தையும் ஒற்றுமையையும் சிதைப்பதற்கான சந்தர்ப்பமாக 75 வது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வினை முன்வைப்பதற்கான பேச்சுவார்தை என்ற போர்வையில் பேச்சுக்களை ஆரம்பித்துப் பேசினார். ரனிலின் இராஜதந்திரம் தெரிந்தும் தெரியாதது போல் செயற்பட்ட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் பேச்சுவார்தைக்குச் சென்று மூக்குடைபட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பிரிந்து செல்வதற்குக் காரணமானார். தீர்வுத் திட்டம் தொடர்பாக ரனில் விக்கிரமசிங்காவோடு பேசுவதென்றால் முழுமையான, நியாயமான தீர்வுத் திட்டத்தோடு செல்ல வேண்டும். கால அவகாசம் கொடுக்காது இதுதான் எமது அறுதியும் உறுதியுமான தீர்வுத் திட்டம். காலத்தை நீடிக்காது ஒருநாள் அல்லது இருநாள் பேச்சுவார்த்தையோடு முடிவுக்குக் கொண்டு வருவதாக இருந்தால் பேசுவோம. இல்லையெனில் நிறுத்திவிடுவோம் எனக் கூறி பேச்சுவார்த்தையை நிறுத்தி விட்டிரக்க வேண்டும். காலத்தை நீடித்ததனால் தமிழ் தலைவர்களின் பலவீனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தான் வெற்றியடைந்தார்;.

முகாமைத்துவத்தில் ஒருவரின் வெற்றி என்பது மற்றவிரின் பலவீனத்திலிருந்து கட்டியெழுப்பப்படுகிறது. இந்த சித்தாந்தத்தைப் புரிந்த கொண்டு இன்றுவரை ரனில் கடைப்பிடித்து வருகிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சிலர் அவரின் கைத்தடிகளாக இருந்த கொண்டு அவரை எதிர்ப்பது போல் அறிக்கை விட்டுக்கொண்டிருக்கினறனர். இன்னும் சிலர் தமது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கண்டும் காணாததுபோல் இருக்கின்றனர். இவர்களின் பலவீனத்தை அறிந்து கொள்வதற்குத் தனித்தனியே தொலைபேசியில் அழைப்பு விடுத்தார். அவர்களும் சந்தோசமாகப் பேசினர். ரனிலின் முன்னோட்டம் பலித்து விட்டது. வெற்றியும் கண்டு கொண்டார். கட்சிகள் பிரிந்துவிட்டன. பலமும் குறைந்துவிட்டது. இப்படித்தான் தமிழ் தலைவர்கள் பலர் தமிழ் மக்களின் தலையில் மண்ணைத் தூவிக் கொண்டிருக்கின்றனர். இதனைத் தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொண்டு எதிர்காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கழுதை தெய்ந்து கட்டெறும்பாகிய மாகாண சபைகள் அதிகாரம் ஆனரின் பிடிகளுக்குள் தள்ளாடிக் கொண்டிருக்கின்றன. ஓன்பது ஆண்டுக்கு மேலாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் அடங்கிப் போய் இருக்கின்றன. தேசிய மக்கள் சக்தி அரசும் காட்டாப்புக் காட்டிக் கொண்டிருக்கிறது. துமிழ் தலைவர்கள் ஆடிய ஆட்டத்தால் கட்சிகள் பிரிந்து, சிதைந்து பலமிழந்து நிற்கின்றன. இந்த நிலையில் துமிழ் மக்களைக் காப்பாற்றப் போவது யார்?.



# சுவிட்சர்லாந்தில் அழிவின் விளிம்பில் மீன் இனங்கள்

சுவிட்சர்லாந்தில் நீடிக்கும் கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக பல ஆறுகள், ஓடைகளில் நீர்மட்டம் கடுமையாகக் குறைந்துள்ளது. குறிப்பாக Mittelland பகுதியில் Forelle (Trout), sche (Grayling) மீன் இனங்கள் அழிவின் விளிம்பில் இருப்பதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

Aargau பகுதியில் பல ஓடைகள் முற்றிலும் வற்றியதால் பல்லாயிரக்கணக்கான மீன்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. Wasserschloss பகுதியில் Aare ஆற்றின் வழக்கமான ஆகஸ்ட் நீரோட்டம் வினாடிக்கு 605 கன மீட்டராக இருக்கும் நிலையில், தற்போது 246 கன மீட்டராகக் குறைந்துள்ளது.

மேலும் நீரின் வெப்பநிலையும் வழக்கத்தைவிட அதிகரித்துள்ளதால், குளிர்ந்த நீரைச் சார்ந்து வாழும் மீன் இனங்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நிலைமை மிகவும் தீவிரமான கட்டத்தை எட்டியுள்ளதாக மீன்வள நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# சுவிஸ் மக்கள் ஏன் வெளிநாட்டு சீஸை வாங்குகிறார்கள்?

சீஸ் என்றாலே முதலில் நினைவிற்கு வரும் நாடுகளில் ஒன்று சுவிட்சர்லாந்து. ஆனால் தற்போது ஒரு ஆச்சரியமான மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக, சுவிட்சர்லாந்து ஏற்றுமதி செய்வதை விட அதிக அளவில் சீஸை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகிறது.

2007ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்துடன் சந்தை தளர்வு அமலுக்கு வந்ததிலிருந்து, பல்வேறு ஐரோப்பிய சீஸ் வகைகள் சுவிஸ் சந்தையில் எளிதாகக் கிடைக்கத் தொடங்கின. அதோடு, பல வெளிநாட்டு சீஸ் வகைகள் குறைந்த விலையிலும் கிடைப்பதால், பல நுகர்வோர் அவற்றை விரும்புகின்றனர்.

இதனால் சுவிஸ் சீஸ் தரம் குறைந்துவிட்டது என்று அர்த்தமில்லை. Gruy“re, Emmentaler, Appenzeller, Raclette போன்ற பாரம்பரிய சுவிஸ் சீஸ்கள் இன்னும் உலகளவில் உயர்ந்த மதிப்பைப் பெற்றுள்ளன.

மாறிவரும் சந்தை, விலை மற்றும் நுகர்வோரின் விருப்பங்களே இந்த மாற்றத்திற்குக் காரணம் என நிபுணர்கள் கூறுகின்றனர்.




# வட்டி விகிதம் பூஜ்யத்தில் வீட்டு விலைகள் மீண்டும் உயர்வு

சுவிட்சர்லாந்தில் பூஜ்ய வட்டி விகிதக் கொள்கை தொடர்வதால், வீட்டு மற்றும் குடியிருப்பு சொத்துகளின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன.

2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில்: அடுக்குமாடி குடியிருப்புகளின் விலை சராசரியாக 2.4% உயர்ந்துள்ளது. தனி குடும்ப வீடுகளின் விலை 3.7% அதிகரித்துள்ளது.

இந்த தகவலை MoneyPark மற்றும் Price-Hubble நிறுவனங்கள் வெளியிட்டுள்ள புதிய ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.




# சூரிச்சை நோக்கி ஓட்டுநர் இல்லாத Taxi & Europaallee ல் கால்பதித்த Waymo

அமெரிக்காவின் தானியங்கி வாகன நிறுவனமான Waymo, சூரிச்சின் Europaallee பகுதியில் தனது சுவிஸ் கிளையை பதிவு செய்துள்ளது. Google Switzerland இயங்கும் அதே பகுதியில் Waymo Switzerland GmbH அமைந்துள்ளது.

சூரிச் வர்த்தகப் பதிவேட்டின்படி, ஓட்டுநர் இல்லாத தானியங்கி வாகனங்களைப் பயன்படுத்தி Ride&Hailing மற்றும் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவது நிறுவனத்தின் நோக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில் 2025 மார்ச் முதல் Robotaxi உள்ளிட்ட தானியங்கி வாகனங்களை சோதனை அடிப்படையில் இயக்க அனுமதி உள்ளது. எனினும், Waymo இதுவரை சுவிட்சர்லாந்தில் Pilot சேவைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவில்லை என்று மத்திய சாலை அலுவலகமான ASTRA தெரிவித்துள்ளது.

Waymo ஏற்கனவே அமெரிக்காவின் பல நகரங்களில் ஓட்டுநர் இல்லாத வாகன சேவைகளை நடத்தி வருகிறது.

சுவிட்சர்லாந்தில் இத்தகைய Robotaxi சேவைகள் பரவலாக பயன்பாட்டுக்கு வருவது 2030 முதல் 2035 வரையிலான காலப்பகுதியில் இருக்கலாம் என Swiss Association for Autonomous Mobility (SAAM) மதிப்பிட்டுள்ளது.




# Basel- Stadt அக்டோபர் முதல் டிஜிட்டல் பார்க்கிங் அட்டைகள்

சுவிட்சர்லாந்தின் Basel&Stadt மாகாணத்தில் 2026 அக்டோபர் முதல் பார்க்கிங் அனுமதி அட்டைகள் டிஜிட்டல் முறைக்கு மாற்றப்படவுள்ளன. இதன் பின் புதிய பார்க்கிங் அட்டைகளை வாகனத்தின் முன்பக்க கண்ணாடியில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இருக்காது.




தற்போது பயன்பாட்டில் உள்ள பார்க்கிங் அட்டைகள் அவற்றின் காலாவதி தேதி வரை செல்லுபடியாகும். அவை புதுப்பிக்கப்படும் போதே டிஜிட்டல் முறைக்கு மாற்றப்படும்.

Basel&Stadt பகுதியில் சுமார் 20,000 குடியிருப்பாளர் பார்க்கிங் அட்டைகளும், Riehen பகுதியில் சுமார் 8,000 அட்டைகளும் பயன்பாட்டில் உள்ளன. அட்டைதாரர்களுக்கு புதிய நடைமுறை குறித்து எழுத்து மூலம் அறிவிக்கப்படவுள்ளது.

புதிய பார்க்கிங் அனுமதிகளை தொடர்ந்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இனி அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்படாது.

கட்டணம் Motorfahrzeugkontrolle அலுவலகத்துக்கு கிடைத்ததும் அனுமதி செல்லுபடியாகும்.

எனினும், இந்த டிஜிட்டல் நடைமுறை பிராந்திய வணிக பார்க்கிங் அட்டைகளுக்கு (regionale Gewerbepark-karte) பொருந்தாது.



# AI அச்சத்திலும் தொழிற்பயிற்சியை தொடங்கும் 70,000 இளைஞர்கள்

Switzerland-ல் இந்த ஆண்டு சுமார் 70,000 இளைஞர்கள் தொழிற்பயிற்சியை ஆரம்பித்துள்ள நிலையில், செயற்கை நுண்ணறிவு (AI) காரணமாக எதிர்கால வேலை வாய்ப்புகள் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் இளம் தலைமுறையினரிடையே அதிகரித்துள்ளது.

கட்டாயப் பள்ளிக் கல்வியை முடித்த இளைஞர்கள் பலர் ஆகஸ்ட் மாதத்துடன் தொழில் வாழ்க்கைக்குள் நுழைந்துள்ளனர். Migros மற்றும் இணிணிணீ நிறுவனங்களில் தலா சுமார் 1,300 பேரும், Lidl-ல் 62 பேரும், Swisscom-ல் 186 பேரும், Dertour Suisse-ல் 130 பேரும் தொழிற்பயிற்சியைத் தொடங்கியுள்ளனர்.

இதற்கிடையில், 2027ஆம் ஆண்டுக்கான தொழிற்பயிற்சி இடங்களைப் பெற பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தற்போது விண்ணப்பங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

செயற்கை நுண்ணறிவின் வேகமான வளர்ச்சி காரணமாக குறிப்பாக அலுவலகம் சார்ந்த ஆரம்ப நிலை வேலைகளின் எதிர்காலம் குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. அதேநேரம், கைவினை மற்றும் பராமரிப்புத் துறைகளில் மனிதர்களின் நேரடி பங்களிப்பு தொடர்ந்து முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. JobCloud ஆய்வின்படி, 25 வயதுக்குட்பட்டவர்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமானோர் AI காரணமாக தங்களது வேலை அல்லது தொழில்சார் முக்கியத்துவம் எதிர்காலத்தில் பாதிக்கப்படலாம் என்று அஞ்சுகின்றனர்.


SAVE THE DATE
வெள்ளிவீதி
இலக்கியக் கூடுகை 2
01.11.2026
SUNDAY
ZURICH, SWITZERLAND
நூல்கள்
எழுத்தாளர்கள்
மொழிபெயர்ப்பாளர்கள்
ஆற்றுகைக் கலைஞர்கள்
வாசகர்கள்
முழுநாள் அரங்கு
தகவல்களுக்கும், தங்குமிட ஏற்பாடுகளுக்கும்
WHATSAPP ONLY | +41 79 519 24 29
SAYANTHAN / KABILAN




# சுவிட்சர்லாந்தில் திருமணம் மூலம் பெற்ற குடியுரிமை விவாகரத்தால் பறிக்கப்படுமா?

சுவிட்சலாந்தில் சுவிஸ் குடிமகனை திருமணம் செய்து கொண்ட வெளிநாட்டவர்கள், குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் எளிமைப்படுத்தப்பட்ட குடியுரிமை (Facilitated Naturalisation) மூலம் சுவிஸ் குடியுரிமை பெற முடியும். ஆனால், பின்னர் விவாகரத்து ஏற்பட்டால் அந்த குடியுரிமை தொடருமா என்ற கேள்வி பலரிடமும் எழுகிறது.

பொதுவாக, விவாகரத்து ஏற்பட்டதற்காக மட்டும் சுவிஸ் குடியுரிமை ரத்து செய்யப்படாது. திருமணம் உண்மையான குடும்ப வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றிருந்தால், பல ஆண்டுகள் இணைந்து வாழ்ந்திருந்தால் அல்லது குழந்தைகள் இருந்தால், குடியுரிமை தொடர்ந்து செல்லும்.

ஆனால், திருமணம் குடியுரிமை பெறுவதற்காக மட்டுமே நடைபெற்றதாக அதிகாரிகள் சந்தேகித்தால் நிலைமை மாறக்கூடும். குறிப்பாக, குடியுரிமை பெற்ற சில மாதங்களிலேயே விவாகரத்து செய்து வேறு ஒருவரை திருமணம் செய்துகொள்ளும் போன்ற சூழ்நிலைகள் விசாரணைக்கு வழிவகுக்கும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில், சுவிட்சராந்தின் குடிவரவு செயலகமான (SEM) அதிகாரிகள் விசாரணை நடத்தி, திருமணம் மோசடி நோக்கத்துடன் நடைபெற்றது என நிரூபிக்கப்பட்டால், குடியுரிமையை ரத்து செய்யும் அதிகாரம் அவர்களுக்கு உள்ளது.

அதிகாரப்பூர்வ தகவலின்படி, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 50 பேரின் சுவிஸ் குடியுரிமை இவ்வாறு ரத்து செய்யப்படுகிறது. மோசடி தொடர்பான தகவல் கண்டறியப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் அல்லது குடியுரிமை பெற்ற எட்டு ஆண்டுகளுக்குள் இந்த நடவடிக்கை எடுக்கப்படலாம்.

குடியுரிமை ரத்து செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட நபர் சுவிட்சராந்தில் தொடர்ந்து தங்கும் உரிமையையும் இழக்க நேரிடலாம்.

இதற்கிடையில், ஒருவர் தனது சொந்த நாட்டின் குடியுரிமையையும் முன்பே கைவிட்டு, பின்னர் சுவிஸ் குடியுரிமையும் ரத்து செய்யப்பட்டால், அவர் நாடற்றவராக (Stateless) மாறும் அபூர்வ சூழ்நிலையும் உருவாகலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் அவர்களுக்கு சுவிட்சராந்தில் குறிப்பிட்ட வகை தங்கியிருக்கும் அனுமதி வழங்கப்படலாம்.

எனவே, சுவிஸ் குடிமகனை திருமணம் செய்ததாலேயே குடியுரிமை தானாக கிடைப்பதில்லை; அதேபோல் விவாகரத்து ஏற்பட்டதாலேயே அது தானாக பறிக்கப்படுவதும் இல்லை. ஒவ்வொரு வழக்கும் அதன் உண்மைச் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு அதிகாரிகளால் தனித்தனியாக மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

# மாமாங்கேஸ்வரர் ஆலய

# தேர் திருவிழா



கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமான மட்டக்களப்பு அருள்மிகு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் தேர் திருவிழா, (11) காலை 6.50 மணியளவில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ வெகுவிமர்சையாக நடைபெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட கிரியை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் 'அரோகரா' கோஷத்திற்கு மத்தியில் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளி மாமாங்கேஸ்வரர் அருள்பாலித்தார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளையும் ஒருங்கே கொண்ட இவ்வாலயத்தின் மகோற்சவமானது கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.









## செம்மணியில் தொடரும் அதிர்ச்சி;

# தாயத்து மற்றும் நாணயத்துடன் புதிய தடயங்கள் மீட்பு!




யாழ்ப்பாணம் – செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 49-வது நாளில், மேலும் 15 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

அவற்றில் 11 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாகத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆய்வில், தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் குழுவினருடன் தடயவியல் பொலிஸார், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபை ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

இதுவரையிலான அகழ்வாராய்ச்சியில் மொத்தம் 539 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அதில் 524 தொகுதிகள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன. மேலும், 516-வது இலக்கமிடப்பட்ட எலும்புக் கூட்டின் இடுப்புப் பகுதியில் தாயத்து போன்ற ஒரு பொருளும், மணல் குவியலிலிருந்து இலங்கை ஒரு ரூபாய் நாணயமும் சான்றுகளாகக் கைப்பற்றப்பட்டுள்ளன.







## 3 மாதங்களில் 80 உயிர்கள் பலி;

# யாழ். நிலவரம் குறித்து வட மாகாண ஆளுநர் வேதநாயகன் கவலை!

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக உயிரை மாய்த்துக் கொள்ளும் சம்பவங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் கணிசமாக அதிகரித்து வருவது தொடர்பில் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கடும் கவலை வெளியிட்டுள்ளார். இந்நிலையை உடனடியாகக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த அவசர நடவடிக்கைகளை முடுக்கிவிடுமாறு அதிகாரிகளுக்கு அவர் அதிரடி பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற விசேட உயர்மட்டக் கலந்தாய்வின் போது, நிலவும் மோசமான சுகாதாரச் சூழல் குறித்தும், அதனைத் தடுப்பதற்கான பல்துறை கூட்டு வேலைத்திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 80 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. தேசிய மட்டத்தில் 1 லட்சம் பேருக்கு 15 பேர் என்ற அளவில் உள்ள இந்நிலை, யாழ்ப்பாணத்தில் 1 லட்சம் பேருக்கு 30 பேர் எனும் இரு மடங்கு வீதத்தை எட்டியுள்ளதாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டினர்.

குறிப்பாக இளைஞர்களும் பெண்களுமே அதிகளவில் இவ்வாறான தவறான முடிவுகளை நோக்கித் தள்ளப்படுகின்றனர்.

மதுப்பழக்கம், குடும்ப வன்முறைகள், உறவுகளுக்கு இடையிலான தொடர்பாடல் இடைவெளி, தனிமை மற்றும் கடுமையான உளவியல் அழுத்தங்களே இதற்கான முக்கியக் காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இச்சிக்கலை வெறும் சுகாதாரத் துறையின் பிரச்சனையாக மட்டும் பார்க்காமல் கல்வி, நிர்வாகம், பொலிஸ், ஆன்மீகம் மற்றும் ஊடகங்களை உள்ளடக்கிய ‘மாகாண அளவிலான சமூக இயக்கமாக’ மாற்ற வேண்டும்.

இதுவரை பதிவான உயிரிழப்புகள் குறித்த பின்னணியை விரிவாக பகுப்பாய்வு செய்து, ஆபத்தான நிலையில் உள்ளவர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

பல்வேறு திணைக்களங்களுக்கு இடையே நிலவும் இடைவெளியைப்போக்கி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தலைமையில் ஒருங்கிணைந்த செயற்பாட்டு மையத்தை உடனடியாக மீளமைக்க வேண்டும்.

மன அழுத்தம், குடும்பச் சிக்கல்கள் அல்லது தனிமையால் தவிப்பவர்கள் உடனடி உளவியல் ஆலோசனை பெற, வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ‘நேயம்’ (021 222 6666) என்ற 24 மணிநேர இலவச அவசர உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இங்கு தகவல்கள் முற்றிலும் இரகசியமாகப் பேணப்படும்.



# தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் மாகாண சபையோடு முடிந்துவிடாது

## சட்டத்தரணி மணிவண்ணன் திட்டவட்டம்!

மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வாகாது என்றும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தமது கட்சியின் உறுதியான நிலைப்பாடு என்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர முதல்வருமான சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சியில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபை தேர்தல்கள் காலவரையின்றி ஒத்திவைக்கப்படுவதைக் கடுமையாகச் சுட்டிக்காட்டிய மணிவண்ணன், ‘2017-இல் கிழக்கு மாகாண சபையும், 2018-இல் வடக்கு மாகாண சபையும் தமது பதவிக் காலத்தை நிறைவுசெய்தன. கடந்த ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இத்தேர்தலை வேண்டுமென்றே இழுத்தடித்து வருகின்றன.

இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடாகவே நீடிக்க வேண்டும் என்பதிலும், தமிழ் மக்களுக்கு எள்ளளவும் அதிகாரப் பகிர்வு கிடைத்துவிடக் கூடாது என்பதிலும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் மிகத் தெளிவாக உள்ளனர். தமிழ் மக்கள் தமது சொந்தப் பிராந்தியத்தில் சுயஆட்சியை நிறுவுவதைத் தடுப்பதற்காகவே இத்தகைய தேர்தல் பொறிமுறை முடக்கப்பட்டுள்ளது’ எனக் குற்றம்சாட்டினார். 2018-ஆம் ஆண்டில் ஆட்சியில் இருந்த மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டாட்சியின் சதி நடவடிக்கைகளினாலேயே மாகாண சபை தேர்தல் சட்டத்தில் சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டு, இன்றுவரை தேர்தல் நடத்தப்படாமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சாட்டினார்.

13-வது திருத்தச் சட்டத்தின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டிய அவர்:

‘13-வது திருத்தச் சட்டத்தில் தமிழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் எதுவும் இல்லை என்பதையும், அது எமக்கான நிரந்தரத் தீர்வு அல்ல என்பதையும் நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். தமிழ் மக்களின் சுயாட்சி உரிமைக்குச் சமஷ்டி முறையிலான தீர்வே சிறந்தது என்பதில் நாங்கள் மிகத் தெளிவுடனும் உறுதியுடனும் இருக்கிறோம்’ என்றார்.

மாகாண சபை தேர்தலின் அவசியத்தை விளக்கிய மணிவண்ணன், ‘மாகாண சபையோடு எமது உரிமைப் போராட்டம் முடிந்துவிட்டது என்றோ, இதுவே எமக்குச் போதும் என்றோ நாங்கள் ஒருபோதும் கூறவில்லை. ஆனால், அரசியலமைப்பில் உள்ள ஒரு ஜனநாயகப் பொறிமுறையை முடக்கி வைக்கக் கூடாது. அந்த பொறிமுறை இயங்க வேண்டியது மக்களின் உடனடித் தேவையாகும். எனவே, அரசாங்கம் தனது கடப்பாட்டை உணர்ந்து மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்’ என ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

CONSULATE GENERAL OF

# SRI LANKA

GENEVA, SWITZERLAND



# CONSULAR MOBILE SERVICE IN BERN

**The consular services will be available:**

- Acceptance of passport applications
- Amendments of name in passports
- Registration of birth
- Registration of death
- Acceptance of dual citizenship applications
- Issuance of Birth/Marriage/Death Certificates retrieved via e-BMD system
- Attestation of civil status/unmarried Affidavit
- Acceptance of life certificates of pensioners
- Attestation of Affidavit and Power of Attorney

29TH AUGUST 2026
SATURDAY
10.00 AM - 3.00 PM

30TH AUGUST 2026
SUNDAY
10.00 AM - 3.00 PM

HAUS DER RELIGIONEN
Europaplatz 1
3008 Bern

**APPOINTMENTS**
Book appointment on or before
27 August 2026
www.lankamission.org/mcs
SCAN ME

**FURTHER INFORMATION**
For detailed requirements and necessary documents, please visit:
www.lankamission.org/checklist
SCAN ME

**INQUIRIES**
Email:
slcgs.geneva@lankamission.org
Telephone No:
+ 41 77 990 6073
+ 41 77 909 8969

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# பத்திரிகை

## வாரத்தில் ஒருமுறை உங்கள் கரங்களில் மின்னிதழாக...

வேதாந்தி : 004178 6264375

supeedsam@gmail.com

சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில் இணைய இங்கே தொடவும்....

CLICK HERE